மாலை முரசு

பக்கங்கள் 23 + 02

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2058 | தை 01 வியாழக்கிழமை 15.01.2026 | அதிர்வு 169

## பொல்லால் தாக்கப்பட்டு குடும்பஸ்தர் படுகொலை



பொல்லால் தாக்கப்பட்டு குடும்பஸ்தர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொடூர சம்பவம் கண்டி, நாவலப்பிட்டி பொலிஸ் பிரிவுக் 05▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# யாழில் ஜனாதிபதியின் நிகழ்வுகளை அடியோடு புறக்கணித்தது தமிழரசு!

## “பிரஜாசக்தி”க்கு எதிராக நீதிமன்றத்தை நாடுவோம் என்றும் சுமந்திரன் அறிவிப்பு




(நமது விசேட நிருபர்)

யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க இன்று கலந்து கொள்ளும் நிகழ்வுகளில் கலந்துகொள்வ தில்லை என்று இலங்கைத் தமிழரசுக் கட்சி முடிவெடுத்துள்ளது.

இந்தத் தகவலை அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ். வடமராட்சியில் இன்று நடை பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“யாழ்ப்பாணத்துக்கு இன்று விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி பொங்கல் நிகழ்வுகளில் கலந்துகொள்கின்றார். அந்நிகழ்வுகளில் கலந்துகொள்ளுமாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியினருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அந்த நிகழ்வுகளில் கலந்துகொள்வதில்லை 05▶

# அரச படைகளால் போரில் பாலியல் வன்முறைகள்!

## சாடுகிறது மனித உரிமைகள் கண்காணிப்பகம் ஐ.நா. அறிக்கையை மேற்கோள் காட்டி விசனம்

ஜெனிவா, ஜனவரி 15

இலங்கையின் உள்நாட்டுப் போருடன் தொடர்புடைய பாலியல் வன்முறை பற்றிய ஐக்கிய நாடுகள் சபையின் புதிய அறிக்கை, இலங்கையில் சர்வதேச சட்டத்தின் கீழ் நடந்த குற்றங்களுக்கான பொறுப்புக்கூறலுக்கான போராட்டத்தில் மற்றொரு படியாகும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் 06▶





# யாழில் பொங்கல் விழாவில் ஜனாதிபதி

வடக்கு மாகாண சபையின் ஏற்பாட்டில், தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட "பொங்கல் விழா" இன்று வியாழக்கிழமை பிற்பகல் வேலணை தெற்கு ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயில் (ஐயனார் கோயில்) முன்றலில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, தமிழர் பாரம்பரிய முறைப்படி வரவேற்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து பொங்கல் பானையில் அரிசியிட்டுப் பொங்கலை அவர் ஆரம்பித்து வைத்தார்.

வடக்கு மாகாண விவசாயம் மற்றும் கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், மீன்பிடி, நீர் விநியோகம் மற்றும் சுற்றாடல் அமைச்சால் ஒழுங்குபடுத்தப்பட்ட இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சருமான இ.சந்திரசேகர், வேலணைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜெ.றஜீவன், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன், எஸ்.ஸ்ரீபவானந்தராஜா, வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட செயலாளர்கள், வடக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள், மாகாண திணைக்களத் தலைவர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.




















### சட்டவிரோதமாக மணல் ஏற்றி வந்த டிப்பர்

# நாவற்குழியில் கோர விபத்து! இரு இளைஞர்கள் உயிரிழப்பு!!

## தைப்பொங்கல் நாளில் துயரம்

(எஸ்.நிதர்ஷன்)

கிளிநொச்சியில் இருந்து சட்டவிரோதமாக மணல் ஏற்றிக்கொண்டு யாழ்ப்பாணம் வந்த டிப்பர் வாகனம் ஒன்று, நாவற்குழிப் பகுதியில் இன்று அதிகாலை 5 மணியளவில் விபத்துக்குள்ளானதில் இரண்டு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர்.

டிப்பர் வாகனம் பாதையை விட்டு விலகி மதிலுடன் மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் கிளிநொச்சி – வட்டக்கச்சி பகுதியைச் சேர்ந்த 20 வயதுடைய ராஜீவன் விதுசன் மற்றும் யாழ்ப்பாணம் – அச்சுவேலிப் பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய நாகராஜா ஜீவராஜ் ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

ஒருவரது சடலம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையிலும், மற்றையவரின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையிலும் வைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான தொடர்பான மேலதிக விசாரணைகளைச் சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.













# வடமராட்சியில் தமிழரசின் தைப்பொங்கல் விழா

(மரியசீலன் திலைக்ஸ்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தைப்பொங்கல் விழா இன்று வடமராட்சியில் நடைபெற்றது.

முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சந்திரலிங்கம் சுகிர்தன் தலைமையில் காலை 9:30 மணியளவில் கட்சியின் வடமராட்சி – மடத்தடி அலுவலகத்தில் தைப்பொங்கல் விழா இடம்பெற்றது.

இதில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டதரணி எம்.ஏ. சுமந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

கட்சியின் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை தவிசாளர் சுரேந்திரன், உப தவிசாளர் தயாபரன், பருத்தித்துறை பிரதேச சபை, பருத்தித்துறை நகர சபை, வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை உறுப்பினர்கள், கட்சியின் முக்கியஸ்தர்கள் எனப் பலரும் இதில் கலந்துகொண்டனர்.













# அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட 36 ஊடகவியலாளருக்கு மீடியா போரத்தால் நிவாரண உதவிகள் வழங்கல்

(கற்பிட்டி நிருபர் சியாஜ்)

"டித்வா" சூறாவளியினால் ஏற்பட்ட அழிவுகளைத் தொடர்ந்து, ஊடக சமூகத்துக்கு ஆதரவளிக்கும் நோக்கில், நாடு முழுவதும் பாதிக்கப்பட்ட 36 ஊடக வியலாளர்களுக்கான விரிவான நிவாரணத் திட்டத்தை ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் பூர்த்தி செய்துள்ளது.

அனர்த்தத்தின் பாரதூரமான விளைவுகளை கருத்தில் கொண்டு அங்கத்தவர்களுக்கு மாத்திரமன்றி சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் அனைவரையும் உதவிகள் சென்றடையும் வகையில் இந்தத் திட்டம் கட்டம் கட்டமாக நடைமுறைப்படுத்தப்பட்டது.

கொழும்பு, கண்டி, புத்தளம், கம்பஹா, பதுளை, கேகாலை, அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் அனர்த்தத்தால் வாழ்வாதாரம் மற்றும் உடைமைகளை இழந்த ஊடகவியலாளர்களுக்கே இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

இதற்கமைய துப்பரவு சாதனங்கள், உலருணவுப் பொதிகள் மற்றும் அத்தியாவசிய வீட்டுப் பாவனைப் பொருட்கள், சமையலறை உபகரணங்கள் மற்றும் நிதி உதவிகள் என்பன வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிவாரணப் பணிக்கு கட்டார் சரிட்டியின் இலங்கை அலுவலகம், ஜே.ஜே. பவுண்டேசன் தலைவர் முஹம்மத் ஹனீப் மற்றும் தொழிலதிபர் பீர்கான் றிஸ்வி ஆகியோர் பங்களிப்புகளை வழங்கியிருந்தனர்.

இதேவேளை பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்களின் நிலைமைகளை நேரில் கண்டறிவதற்காக ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் பிரதிநிதிகள் கொழும்பு, கண்டி, கம்பஹா மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 20 ஊடகவியலாளர்களின் வீடுகளுக்கு நேரடியாக விஜயம் செய்து அவர்களுடன் கலந்துரையாடினர்.

அத்துடன், கொழும்பு மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளத்தால் தமது தொழில்சார் உபகரணங்களை இழந்த இரண்டு ஊடகவியலாளர்களுக்கு, கொழும்பு மாவட்ட பள்ளிவாசல் சம்மேளனத்துடன் இணைந்து ஊடக உபகரணங்களைப் பெற்றுக்கொடுப்பதற்கான முயற்சியையும் போரம் முன்னெடுத்துள்ளது.

அனர்த்த பாதிப்புகளுக்கு மத்தியிலும் பொதுமக்களுக்கு தகவல்களை வழங்குவதில் ஊடகவியலாளர்கள் முதன்மையானவர்களாகச் செயற்படுகிறார்கள்.

அதேவேளை அவர்களும் பல்வேறுபட்ட இழப்புகளை எதிர்கொள்கிறார்கள். அந்த வகையில் இந்த நெருக்கடியான சூழலில் நிவாரண உதவிகளுக்கு அப்பால் அவர்களது வீடுகளுக்கு நேரில் விஜயம் செய்து ஆறுதல் கூறியதன் மூலம் ஊடகவியலாளர்களுக்கிடையிலான சகோதரத்துவப் பிணைப்பை மேலும் வலுப்படுத்த முடிந்தமை மகிழ்ச்சியளிக்கிறது என்று ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் எம்.பி.எம். பைறூஸ் தெரிவித்தார்.

இந்தப் பணியை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதில் பங்களித்த நிறுவனங்கள், தனவந்தர்கள் மற்றும் அமைப்பின் செயற்குழு உறுப்பினர்களுக்கும் அவர் நன்றிகளைத் தெரிவித்தார்.

இன, மத வேறுபாடுகளுக்கு அப்பால், அனர்த்த காலங்களில் ஊடகவியலாளர் சமூகத்தின் நலனை உறுதிப்படுத்துவதில் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்படும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

---

## யாழில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என எமது கட்சி முடிவெடுத்துள்ளது.

இதற்குப் பிரதான காரணம் "பிரஜாசக்தி" எனும் பெயரில் அரச இயந்திரங்களுக்குச் சமாந்தரமாக தமது கட்சியைச் சார்ந்தவர்களை கொண்டு ஒரு அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது

இது குறித்து நாம் பல எதிர்ப்புக்களைத் தெரிவித்துள்ளோம். உள்ளூராட்சி சபைகள் முன்னெடுக்க வேண்டிய வேலைத்திட்டங்களைத் திசை மாற்றிக் கொண்டுள்ளனர்.

குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கில் தமக்கு உள்ளூராட்சி அதிகாரங்கள் கிடைக்காத இடங்களில் இத்தகைய செயற்பாட்டை அவர்கள் முன்னெடுத்துள்ளனர்.

சட்ட ரீதியாக உள்ளூராட்சி சபைகள் முன்னெடுக்க வேண்டிய வேலைகளை வறுமை ஒழிப்பு எனும் பெயரில் நேரடியாக மத்திய அரசு செய்வதைச் சட்ட ரீதியாக சவாலுக்குட்படுத்தவும் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

சுனாமி ஏற்பட்ட போது, வடக்கு, கிழக்கில் விடுதலைப்புலிகளுடன் இணைந்து நிவாரணப் பணிகளை முன்னெடுக்க அன்றைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முயன்றபோதே இதே ஜே.வி.பியினர்தான் உயர்நீதிமன்றத்துக்குச் சென்று அதற்கு எதிராகத் தடையுத்தரவைப் பெற்றனர்.

அதற்கு அவர்கள் நீதிமன்றத்தில் முன்வைத்த வாதம், அரச அமைப்புக்கு சமாந்தரமாக எந்தவொரு அமைப்பையும் செயற்பட அனுமதிக்க முடியாது என்பதே.

சுனாமியால் மிக மோசமாகப் பாதிப்படைந்திருந்த வடக்கு, கிழக்கு மாகாணங்களை மீள் கட்டுமானம் செய்ய முடியாமல் செய்தவர்கள் அவர்கள். அதே சட்ட அடிப்படையில் அவர்கள் இன்று அரசாங்க நிறுவனங்கள், உள்ளூராட்சி சபைகள் ஊடாக சட்ட ரீதியாக செய்ய வேண்டியதை அதற்குச் சமாந்தரமாக, தமது கட்சிக்காரர்களை உள்ளடக்கிய அமைப்பை உருவாக்கி அதன் ஊடாகச் செய்ய முயல்கின்றனர்.

அரச உதவிகள், நிவாரணங்கள், நிதிகளில் தங்களின் கட்சியை அவர்கள் வளர்க்கின்றனர். இதனை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம். அவர்கள் பாவித்த அதே சட்டக் கோட்பாட்டை உபயோகித்து அதனை நிறுத்த முயற்சி எடுப்போம். அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக முதல் கட்டமாக ஜனாதிபதி கலந்துகொள்ளும் நிகழ்வைப் புறக்கணித்துள்ளோம்." - என்றார்.

## பொல்லால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குட்பட்ட கொன்தென்னாவ பிரதேசத்தில் நேற்று புதன்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

நாவலப்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த 56 வயதுடைய நபரே கொலை செய்யப்பட்டுள்ளார்.

கொலை செய்யப்பட்டவருக்கும் 34 வயதுடைய சந்தேகநபருக்கும் இடையில் ஏற்பட்ட தனிப்பட்ட தகராறு காரணமாக இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது என்று நாவலப்பிட்டி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து சந்தேகநபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நாவலப்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## அரச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று (ஜனவரி 15, 2026) தெரிவித்துள்ளது.

ஜனவரி 13, 2025 அன்று வெளியிடப்பட்ட ஐ.நா. அறிக்கை, பாலியல் வன்முறை என்பது அரச பாதுகாப்புப் படைகளால் "வேண்டுமென்றே, பரவலான மற்றும் முறையான மீறல்களின் ஒரு பகுதியாகும்" என்றும், "போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களுக்கு இவை சமமாக இருக்கலாம்" என்றும் கண்டறிந்துள்ளது.

பெண்கள் மற்றும் ஆண்கள் இருவருக்கும் எதிராக செய்யப்பட்ட குற்றங்களில் இருந்து தப்பியவர்களின் கணக்குகளை அடிப்படையாகக் கொண்ட கண்டுபிடிப்புகள், இலங்கை அரசாங்கம் தப்பிப் பிழைத்தவர்களுக்கு நிவாரணம் மற்றும் நீதியை வழங்குவதற்கும் பொறுப்பானவர்களைக் கணக்கில் கொண்டுவருவதற்கும் அவசரத் தேவையை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன.

இலக்கு வைக்கப்பட்ட தடைகள், குற்றவியல் விசாரணைகள் மற்றும் வழக்குத் தொடுப்புகள் உட்பட பொறுப்புக்கூறலை மேம்படுத்துவதற்கான முயற்சிகளுக்கு வெளிநாட்டு அரசாங்கங்கள் உதவ வேண்டும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

"போரின் முடிவில் இலங்கை இராணுவத்தினரால் தமிழ்ப் பெண்கள் கொடூரமாகப் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் நீண்ட காலமாக அறியப்பட்டாலும், பொறுப்பானவர்களை தண்டிக்க விரும்பாத இலங்கை அரசாங்கங்களால் முறையான பாலியல் துஷ்பிரயோக விடயங்கள் புறக்கணிக்கப்பட்டன, மறைக்கப்பட்டன மற்றும் நியாயப்படுத்தப்பட்டன என்பதை ஐ.நா. அறிக்கை காட்டுகிறது" என்று மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசிய துணை இயக்குநர் மீனாட்சி கங்குலி கூறினார்.

"இலங்கையில் நடந்த போர்க்குற்றங்களுக்கு பொறுப்புக்கூறலை ஊக்குவிப்பதற்கான முயற்சிகளை இலங்கையின் சர்வதேச பங்காளிகள் முடுக்கிவிட வேண்டும்." - என்றார் அவர்.

இலங்கையில் நடந்த சர்வதேச சட்டத்தின் கீழ் குற்றங்களுக்கான ஆதாரங்களை சேகரிக்க ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் 2021 இல் இலங்கை பொறுப்புக்கூறல் திட்டத்தை அமைத்தது. அரசாங்கப் படைகளுக்கும் பிரிவினைவாத தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான 26 ஆண்டுகால உள்நாட்டுப் போர் தொடர்பான சர்வதேச குற்றங்களை நம்பகத்தன்மையுடன் விசாரித்து வழக்குத் தொடர அடுத்தடுத்த இலங்கை அரசாங்கங்கள் தவறிவிட்டன.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் தற்போதைய அரசாங்கம் 2024 இல் "நீதி வழங்குவதாக" உறுதியளித்து பதவியேற்றது, ஆனால் வெளிப்படையான முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை. அதே நேரத்தில் பாதிக்கப்பட்டவர்களும் உயிர் பிழைத்தவர்களும் நீண்டகாலமாக பாதிப்பை அனுபவித்து வருகின்றனர். பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் நீக்குவதற்கான மாநாடு மற்றும் ஐ.நா. பெண்கள், அமைதி மற்றும் பாதுகாப்பு நிகழ்ச்சி நிரல் உள்ளிட்ட சர்வதேச பெண்கள் உரிமைகள் தரநிலைகளின் கீழ், மோதல் தொடர்பான பாலியல் வன்முறையை நிவர்த்தி செய்ய இலங்கை தவறியமை பொறுப்புக்கூறல் மற்றும் உயிர் பிழைத்தவர்களின் உரிமைகள் குறித்த கவலைகளை அதிகரிக்கின்றன.

மே 18, 2009 அன்று முடிவடைந்த ஆயுத மோதலின் போது, இரு தரப்பினரும் ஏராளமான போர்க்குற்றங்களைச் செய்தனர் – குறிப்பாக சண்டையின் இறுதி மாதங்களில். அரசாங்க வீரர்களால் நினைவுப் பொருள்ளாக உருவாக்கப்பட்ட புகைப்படங்கள் மற்றும் மொபைல் போன் வீடியோக்கள், கைதிகளின் சுருக்கமான மரணதண்டனை மற்றும் வெளிப்படையாக பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு பின்னர் கொலை செய்யப்பட்ட நிர்வாண பெண் போராளிகளின் சடலங்களைக் காட்டுகின்றன. அடுத்தடுத்த இலங்கை அரசாங்கங்கள் விசாரணைகளை நிறுத்தி நீதியை மறுத்தமையென மனித உரிமைகள் கண்காணிப்பகம் கண்டறிந்துள்ளது.

பாலியல் வன்முறை அரசால் "நிறுவன ரீதியாக செயல்படுத்தப்பட்டது" என்றும், போர் முழுவதும் "தகவல்களைப் பிரித்தெடுப்பதற்கும், ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்கும், தனிநபர்களையும் சமூகங்களையும் அச்சுறுத்துவதற்கும், பயம் மற்றும் அவமானத்தின் பரவலான சூழலை ஏற்படுத்துவதற்கும் ஒரு மூலோபாய கருவியாகப் பயன்படுத்தப்பட்டது" என்றும் ஐ.நா. ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்தனர். பாதிக்கப்பட்டவர்களும் உயிர் பிழைத்தவர்களும் பெரும்பாலும் மோதலால் பாதிக்கப்பட்ட தமிழ் சமூகங்களைச் சேர்ந்தவர்கள், மேலும் இந்த மீறல்கள் முதன்மையாக அரசு நடத்தும் தடுப்பு மையங்களில் நிகழ்ந்தன.

உயிர் பிழைத்தவர்கள் நீடித்த மருத்துவப் பிரச்சினைகள் மற்றும் சமூக களங்கத்தை விவரித்தனர். இருப்பினும், இலங்கையில் மோதல் தொடர்பான பாலியல் வன்முறையில் இருந்து தப்பியவர்களுக்கு "நீதி அல்லது மறுசீரமைப்புக்கான தற்போது காணக்கூடிய பாதை இல்லை" என்று ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

பாலியல் வன்முறையால் "ஆண்கள் பெண்களைப் போலவே பாதிக்கப்பட்டவர்களாக" இருந்தமையைக் கண்டறிந்த ஐ.நா. ஆய்வாளர்கள், ஆனால் ஆண் உயிர் பிழைத்தவர்களை பாதிக்கும் குறிப்பிட்ட களங்கம் ஆய்வுகளின் போது அவர்களை ஈடுபடுத்துவதை "குறிப்பாக சவாலானதாக" மாற்றியது.

இந்தக் குற்றங்களின் மற்றொரு மரபு, மோதலுக்குப் பிந்தைய இலங்கையில் பாலியல் வன்முறையின் பரவல் என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்தனர். உயிர் பிழைத்தவர்கள், அச்சுறுத்தல் மற்றும் "தொடர்ச்சியான கண்காணிப்பு, பெரும்பாலும் கடந்த கால துஷ்பிரயோகத்திற்குப் பொறுப்பான அதிகாரிகளால்" நீடித்த சூழலை விவரித்தனர்.

பாலியல் வன்முறை வழக்குகளில் 20 ஆண்டு வரம்புகள் மற்றும் இலங்கை சட்டம் ஆண்களை பாலியல் வன்கொடுமை செய்வதை அங்கீகரிக்கவில்லை என்பது உட்பட, நீதிக்கு குறிப்பிடத்தக்க சட்ட மற்றும் நிறுவன தடைகள் உள்ளன. புகார்களைப் பதிவு செய்ய முயன்ற சில உயிர் பிழைத்தவர்கள், காவல்துறை மற்றும் நீதிமன்ற அதிகாரிகளிடம் அவமானகரமான அல்லது அச்சுறுத்தும் அனுபவங்களை விவரித்தனர். "உயிர் பிழைத்தவர்கள் அவர்கள் அஞ்சும் நிறுவனத்திடமிருந்து பாதுகாப்பைத் தேடுவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது" என்று ஒரு பதிலளித்தவர் ஐ.நா.விடம் கூறினார்.

2018 ஆம் ஆண்டில், இலங்கை அரசாங்கம் மோதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கும் உயிர் பிழைத்தவர்களுக்கும் இழப்பீடு வழங்க இழப்பீட்டு அலுவலகச் சட்டத்தை நிறுவியது, ஆனால் ஐ.நா.வின் கூற்றுப்படி, அரசாங்கம் "அவர்களுக்கு இடைக்கால அல்லது முழுமையான இழப்பீடுகளை வழங்க எந்த உறுதியான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை, மேலும் அதன் வழக்குகளின் எண்ணிக்கையின் புள்ளி விவரங்களை பாலினத்தால் பிரிக்கவில்லை." சர்வதேச சட்டத்தின் கீழ், உயிர் பிழைத்தவர்களுக்கு இழப்பீடு பெற உரிமை உண்டு. அவற்றை வழங்கத் தவறியதன் மூலம் பலருக்கும் கவனிப்பு, கண்ணியம் அல்லது நீதி இல்லாமல் செய்யப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கமும் அதன் சர்வதேச பங்காளிகளும் மருத்துவ சிகிச்சை மற்றும் இடைக்கால நிவாரணம் உள்ளிட்ட ஆதரவை வழங்குவதற்கான ஒரு திட்டத்தை அவசரமாக உருவாக்க வேண்டும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

உயிர் பிழைத்தவர்கள் பலர் நீதியை மேம்படுத்துவதற்காக வெளிநாட்டு அரசாங்கங்கள் அல்லது சர்வதேச அமைப்புகளில் நம்பிக்கை வைத்துள்ளனர்.

இருப்பினும்,"சர்வதேச நடிகர்கள் கவலை தெரிவித்திருந்தாலும், நம்பகமான பொறுப்புக்கூறலை எளிதாக்குவதற்கும், உயிர் பிழைத்தவர்களுக்கு நீதி கிடைப்பதற்கும் அர்த்தமுள்ள நடவடிக்கைகள் குறைவாகவே உள்ளன." என்று கண்காணிப்பகத்தின் அறிக்கை கூறுகின்றது.

"சர்வதேச சட்டத்தின் கீழ் போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களைச் செய்தவர்களைத் தண்டிக்க இலங்கை கடமைப்பட்டுள்ளது. மேலும் அது நிகழும் வரை, வெளிநாட்டு அரசாங்கங்கள் பொறுப்புக்கூறலுக்காக அழுத்தம் கொடுக்க வேண்டும்" என்று கங்குலி கூறினார்.

"அதாவது சட்ட செயல்முறைகளுக்கு ஆதரவை வழங்குதல், அமைதி காக்கும் பணிகளுக்கான இராணுவ வீரர்களை சிறப்பாக ஆய்வு செய்தல் மற்றும் வெளிநாடுகளில் குற்றவியல் வழக்குகளை உலகளாவிய அதிகார வரம்பிற்குள் கொண்டுவருவதற்கான ஒருங்கிணைந்த முயற்சிகள் போன்றவற்றைச் செய்யலாம்." - என்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் மேலும் தெரிவித்துள்ளது.




# மன்னாரில் இன்று ஜனாதிபதி அநுரகுமார தலைமையில் காற்றாலை மின் திட்டத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு

**(மன்னார் நிருபர்கள்)**

இலங்கையின் புதுப்பிக்கத்தக்க சக்தித் துறையில் ஒரு முக்கிய மைல்கல்லாக, மன்னாரில் 50 மெகாவாட் "ஹேவிண்ட் வன் லிமிட்டெட் நிறுவனத்தின்" காற்றாலை மின் திட்டத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் இன்று வியாழக்கிழமை மன்னார் கொன்னயன் குடியிருப்பில் நடைபெற்றது.

ஹேலிஸ் பென்டன்ஸ் மற்றும் ஹேலிஸ் குழுமத்தின் அங்கமான ஹேவிண்ட் வன் லிமிட்டெட் நிறுவனம், இலங்கை மின்சார சபையுடன் இணைந்து இந்தத் திட்டத்தை முன்னெடுத்துள்ளது.

இந்த நிகழ்வில் வலுசக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடி, வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், வலுசக்தி கௌரவ பிரதி அமைச்சர் முஹமது இலியாஸ் முஹமது அஹ்ரம் கூட்டுறவுத்துறை பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான ம.ஜெகதீஸ்வரன், செ.திலகநாதன் ஆகியோரும், மன்னார் மாவட்ட செயலர் கே.கனகேஸ்வரன், முப்படை அதிகாரிகள் உள்ளிட்ட அதிகாரிகள் பலரும் பங்கேற்றனர்.

மன்னார் பகுதியில் முன்னெடுக்கப்படும் இந்த 50 மெகாவாட் காற்றாலை மின் திட்டமானது, நாட்டின் தேசிய மின்வழங்கலுக்குத் தூய எரிசக்தியைச் சேர்ப்பதோடு, சூழலுக்கு உகந்த மின் உற்பத்தியை ஊக்குவிக்கும் ஒரு முனனோடித் திட்டமாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.










# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பொங்கும் கண்காணிப்பகம்

‘விரைவில் நீதி, நியாயமான - நின்று, நிலைத்து, நீடிக்கக் கூடிய - அரசியல் தீர்வையும் உள்ளடக்கிய புதிய அரசமைப்பு உருவாக்கப்படும். அதற்கிடையில், ஒரு வருடத்துக்குள், மாகாணசபை தேர்தல் நடத்தப்படும், தீர்வு வரும் வரையில் அரசமைப்பின் அதிகார பகிர்வு ஏற்பாடுகள் முழுவதையும் உள்ளடக்கிய நடைமுறையாக்கம் இடம்பெறும்’ - என்றெல்லாம் தமிழ் மக்களுக்கும் நாட்டுக்கும் கயிறு கொடுத்து அதிகாரத்துக்கு வந்த ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கா இப்போது அவற்றையெல்லாம் தூக்கிக் கடாசி விட்டு, மன்னாரிலும் யாழ்ப்பாணத்திலும் பொங்கல் திருவிழாக்களை நடத்திக் கொண்டிருக்கிறார்.

அவர் வழங்கிய வாக்குறுதிப் பொங்கல் தமிழ் மக்களை முட்டாளாக்கிய நிலையில் அவரது தைப் பொங்கல் நடவடிக்கைகள் இம்முறை வடக்கில் நடக்கின்றன.

இந்தச் சமயத்தில் அவரது அரசுக்கும் இதற்கு முந்திய அரசுகளுக்கும் சேர்ந்து அவற்றுக்கு எதிராக ஒன்றாக பொங்கி எழுந்திருக்கின்றது சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம்.

இந்தப் பொங்கல் திருநாளில் அந்த சர்வதேச மனித உரிமைகள் கட்டமைப்பு வெளியிட்ட அறிக்கையில் அரச படைகள் யுத்தத்தின் போது தமிழ் மக்களுக்கு எதிராகவும் போராளிகளுக்கு எதிராகவும் மோசமான பாலியல் வன்முறைகளில் ஈடுபட்டன என்பதை ஐ.நா. அறிக்கையை மேற்கோள்காட்டி அம்பலப்படுத்தி இருக்கின்றது.

போர் குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களுக்குச் சமனான வகையில் பாலியல் வன்முறைகள் அரச படைகளால் இழைக்கப்பட்டிருக்கின்றன என்பதை தனது இன்றைய அறிக்கையில் சுட்டிக்காட்டி உள்ளது மனித உரிமைகள் கண்காணிப்பகம்.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் தற்போதைய அரசாங்கம் 2024 இல் ‘நீதி வழங்குவதாக’ உறுதியளித்துப் பதவியேற்றது. ஆனால் வெளிப்படையான முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை. அதே நேரத்தில் பாதிக்கப்பட்டவர்களும் உயிர் பிழைத்தவர்களும் நீண்டகாலமாக பாதிப்பை அனுபவித்து வருகின்றனர் - என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் தனது இன்றைய அறிக்கையில் சுட்டிக்காட்டி இருக்கின்றது.

கடந்த காலங்களில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட மிக மோசமான போர் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் போன்றவை தொடர்பில் நீதியும் செய்யாமல், நியாயமான தீர்வையும் வழங்காமல் தமிழ் மக்களை அவல நிலையில் ஆழ்த்தியிருக்கும் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவினுடைய அரசின் உண்மை முகத்தை மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் இன்றைய அறிக்கை வெட்ட வெளிச்சமாக அம்பலப்படுத்திக் காட்டுகின்றது என்பது உண்மை.

பௌத்த - சிங்களப் படைகளின் அட்டூழியங்களை மறைத்து, அவற்றைக் காபந்து பண்ணிப் பாதுகாப்பது மட்டுமே தமது தலையாய பணி என்ற சிங்கள மனவமைப்பின் பேரினவாத மேலாதிக்க சிந்தனையில் தென்னிலங்கை அரசுகள் மூழ்கிக் கிடக்கும் வரை அவற்றிடமிருந்து தமிழர்கள் நீதியை எதிர்பார்ப்பதில் அர்த்தமில்லை.




# சாய்ந்தமருது அல்-ஜலால் மகா வித்தியாலயத்தின் புதிய அதிபராக மருதமுனை எம்.எம்.ஹிர்பகான்

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

கல்முனை கல்வி வலயத்திற்குட்பட்ட சாய்ந்தமருது அல்- ஜலால் மகா வித்தியாலயத்தின் பொறுப்பதிபராக மருதமுனையை சேர்ந்த, எம்.எம்.ஹிர்பகான் (அதிபர் தரம் ஐ) கடந்த திங்கள் கிழமை கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் அதிபர் சேவை இடமாற்ற பட்டியல் மற்றும் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளரின் கடிதத்திற்கு அமைய, சாய்ந்தமருது கோட்டக்கல்வி பணிப்பாளர் திருமதி அஸ்மா மலிக், அல்-ஜலால் வித்தியாலயத்தின் பிரதி அதிபர் எம்.ஏ.சிராஜ் மற்றும் உதவி அதிபர்கள், ஆசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், முன்னிலையில் பாடசாலை கடமைகளை அதிபர், எம்.எம்.ஹிர்பகான் பொறுப்பேற்றுக் கொண்டார்.

எம்.எம்.ஹிர்பகான், இதற்கு முன்னர் மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியில் பொறுப்பதிபராக கடமையாற்றியவர். மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரி, ஷம்ஸ் மத்திய கல்லூரி ஆகியவற்றில் அதிபராகவும், பிரதி அதிபராகவும் நீண்ட காலமாக சேவை யாற்றியுள்ளார். 1994 ஆம் ஆண்டு முதல் ஆசிரியர் நியமனம் பெற்று அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையில் கடமையாற்றியமையுடன் பின்னர் ஒலுவில் அல்-ஹம்றா வித்தியாலயத்திலும் ஆசிரியராகக் கடமையாற்றியுள்ளார்.

2008ம் ஆண்டு அதிபர் பரீட்சையில் சித்தியடைந்து 18 ஆண்டுகள் அதிபர் சேவையில் பணியாற்றி வரும் இவர் ஒரு சிரேஷ்ட அதிபராவார். ஆசிரியராக இருந்த காலப்பகுதியில் "லொஜிக் ஹிர்பகான்" என பெயர் பெற்றவர். மருதமுனையின் கண்கள் எனப்படும் அல்-மனார், ஷம்ஸ் ஆகிய இரு பாடசாலைகளிலும் பொறுப்பதிபராக இருந்த பெருமை இவரையே சாரும். புதிய பாடசாலையில் கடமைபொறுப்பை ஏற்றுள்ள இவருக்கு கல்விச் சமூகம் தமது வாழ்த்துக்களையும் பாராட்டுதல் களையும் தெரிவித்துள்ளது.





# வடமராட்சியில் 12 கிலோ கேரள கஞ்சா மீட்பு!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். வடமராட்சி - திக்கம் பகுதியில் 12 கிலோகிராம் எடையுள்ள கேரள கஞ்சா மீட்கப்பட்டது.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய நேற்று மாலை இந்தக் கஞ்சா பொதிகள் பருத்தித்துறை பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

சந்தேகநபர் ஒருவர் தப்பியோடிய நிலையில் மோட்டார் சைக்கிள் ஒன்று பொலிஸாரால் மீட்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்

# உறவுகளை அஞ்சலிக்க கோப்பாய் துயிலும் இல்லத்தை இராணுவத்திடமிருந்து விடுவிக்கத் தீர்மானம் வேண்டும்!

## *தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தகவல்*

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லக் காணி இராணுவத்துக்குக் கையளிப்புச் செய்யப்பட்டுள்ளது என்ற தகவல் பிரதேச அபிவிருத்திக் குழுவில் காட்சிப்படுத்தப்பட்ட நிலையில், இராணுவம் அங்கு முகாமிட்டிருப்பது உரிமை மீறலாகும்.

உறவுகள் அஞ்சலிப்பதற்கான உரிமையை உறுதிப்படுத்தும் வகையில் அந்தக் காணியை விடுவிக்க அபிவிருத்திக் குழுவில் தீர்மானம் உடன் நிறைவேற்றப்பட வேண்டும் என்று வலிகாமம் கிழக்கு பிரதேச சபை தவிசாளர் தியாகராஜா நிரோஷ் வலியுறுத்தினார்.

இராணுவத்தினரால் விடுவிக்கப்பட வேண்டிய காணிகள் விடயத்தில், 19.42 ஏக்கர் நிலம் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சு சுவிகரிப்பு செய்த நிலையில் தற்போதைய நிலையில் அரச காணியாக அது 2014 இல் இராணுவத்தினருக்குக் கையளிப்புச் செய்யப்பட்டுள்ளது என்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கோப்பாய் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இதனையடுத்து இவ்விடயத்தில் குறுக்கிட்டு பேசிய வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் நிரோஷ்,

மாவீரர் துயிலும் இல்ல காணி இராணுவத்தினருக்கு கையளிப்புச் செய்யப்பட்டுள்ளது என்ற தகவலை நாம் புதிதாக தற்போதே கேள்விப்படுகின்றோம். அது முன்னைய காலங்களில் இடம்பெற்றதாக தங்களால் வெளிப்படுத்தப்படுகிறது. இந்த இரகசியத் தகவலை நாம் அறியும் நிலையில், நாம் அதனை கடுமையாக எதிர்க்கின்றோம். துயிலும் இல்லத்தில் எமது உறவுகளின் வித்துடல்கள் விதைக்கப்பட்டிருக்கின்றன. அங்கு மரணித்தவர்களை நினைவு கொள்ளும் உரிமை, அஞ்சலிக்கும் உரிமை எமது உறவுகளுக்குக் கிட்டவேண்டும்.- என்றார்.

இதற்குப் பதிலளித்த அபிவிருத்திக் குழுவின் தலைவர் ரூவன் ஜெயச்



சந்திரமூர்த்தி எம்.பி, இது 2014 ஆம் ஆண்டு இராணுவத்திற்கு வழங்கப்பட்டுள்ளது என்றார். இதனையடுத்து குறுக்கிட்ட தவிசாளர் 2014 ஆம் ஆண்டு எந்த அடிப்படையில் கையளிக்கப்பட்டிருக்கின்றது? காணி கையளிப்பு சட்டங்கள் எவ்வாறு பின்பற்றப்பட்டன? எனக் கேள்வி எழுப்பினார். இதற்கு பதிலளித்த அபிவிருத்திக்குழுவின் தலைவர், மாவீரர் துயிலும் இல்ல நிலங்களை அரசு விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது என்றார். அது நடக்கும் என்றார். இராணுவம் இருக்கும் பெருமளவான காணிகள் விடுவிக்கப்படும் என்றார். தையிட்டி விகாரை கூட அவ்வாறு தான் என பதிலளித்தார்.

இதனை ஏற்றுக்கொள்ளாத தவிசாளர், இந்தக் கூட்டத்தில் ஏன் இதில் இராணுவத்துக்குக் கையளிக்கப்பட்டுள்ளது என்று தகவல் கூறப்பட்டுள்ளது. அவ்வாறான கருமங்கள் எதுவும் காணி பயன்பாட்டுக்குழு ஊடாக நடந்துள்ளதா என தவிசாளர் துருவித் துருவி வினா தொடுத்தார்.

இதற்கு பதிலளித்த பிரதேச செயலாளர் அது விடுவிக்கப்படவேண்டும் என்பதற்காகத்தான் என்றார். காணி உத்தியோகத்தர் பதிலளிக்கையில் சிறைச்சாலை திணைக்களத்துக்குச் சொந்தமான காணி அது 2014 இல் பாதுகாப்புப் படைகளுக்கு வழங்கப்பட்டது என்றார்.

மீண்டும் தவிசாளர், இது எந்தத் திணைக்களத்துக்கு வழங்கப்பட்ட காணியாகவும் இருக்கலாம். இந்தக் காணியில் இருப்பது ஆயிரக்கணக்கானவர்களின் வித்துடல்கள் விதைக்கப்பட்டுள்ளன. இங்கு நினைவு கூர்வதற்கான உரிமை உறுதிப்படுத்தப்பட வேண்டும். அடிப்படையில் மயானங்கள் உள்ளூராட்சி மன்றங்களுக்கு பாரதீனப்படுத்தப்பட வேண்டும். சட்ட ரீதியில் உள்ளூராட்சி மன்றங்களே அந்தக் காணிகளை நிர்வகிக்க முடியும் எனத் தெரிவித்தார்.

இதற்கு பதிலளித்த அபிவிருத்திக்குழுவின் தலைவர் ரஜிவன் எம்.பி, இவ்விடயம் பாதுகாப்பு அமைச்சு, ஜனாதிபதி செயலகத்துடன் தொடர்புடையது என்றார்.

இதற்கு பதிலளித்த தவிசாளர் இங்கு உத்தியோகத்தர்களால் வெளியிடப்படும் தகவல்களின் அடிப்படையில் துயிலும் இல்ல காணி தொடர்பில் பல மாற்றங்கள் வெளித்தெரியாது நடந்துள்ளன. நீங்கள் அரசாங்கத்தின் முக்கிய நாடாளுமன்ற உறுப்பினர். அபிவிருத்திக் குழுத்தலைவர். எனவே அரசு என்று வேறு ஒரு சக்தி இருப்பதாக நாம் கூறக்கூடாது. விரைவில் துயிலும் இல்லங்கள் விடுவிக்கப்படவேண்டும். அதற்கு வசதியாக அபிவிருத்திக்குழுக்களில் தீர்மானம் எடுங்கள் என்றார்.

இந்த அபிவிருத்திக்குழு தீர்மானம் ஒன்றை எடுத்திருப்பது பாதுகாப்பானது. இந்தக் காணி திணைக்களம் ஒன்றுக்கு வழங்கப்பட்டுள்ளதால் அதனை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்று அபிவிருத்திக்குழுவின் தலைவர் பதிலளித்தார்.

அதற்கு கேள்வி தொடுத்த தவிசாளர் நீங்கள் உறுதியாக கூறாது சமாளித்த கூறுகின்றீர்கள். ஆகவே இக் காணி சிறைச்சாலைத் திணைக்களத்திடம் இருந்து பிரதேச செயலகத்துக்கு விடுவிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்று நீங்கள் உத்தரவாதமளிப்பதை பதிவு செய்யுங்கள் என கூறினார்.



# வெள்ளத்தில் மூழ்கிய கரையோர மக்களது அரச நிவாரணம் பறிக்கப்பட்டது!

(நூருல் ஹுதா உமர்)

அக்கரைப்பற்று, காதிரியா, மீரா வோடை, பதுர் நகர் உள்ளிட்ட கரையோர பகுதிகளில் வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான ஏழை மக்களுக்கு அரச நிவாரணம் வழங்கப்படாமல் போன பின்னணியில் அதிர்ச்சிகரமான உண்மைகள் வெளிச்சத்துக்கு வந்துள்ளன.


வெள்ள நிவாரணம் தொடர்பாக ஏன் அரச உதவி வழங்கப்படவில்லை? என்ற கேள்விக்கு கிடைத்த பதில் சமூ கத்தை உலுக்கும் வகையில் அமைந் துள்ளது என அக்கரைப்பற்று மாநகர சபை உறுப்பினர் சபுர் ஆதம் தெரி வித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நவம்பர் 26, 27 ஆகிய தினங்களில் குறித்த பகுதிகளுக்கு உரிய சில கிராம உத்தியோகத்தர்கள், அக்கரைப்பற்று பிரதேச செயலகத்துக்கு அனுப்பிய அறிக்கையில், யாரும் பாதிக்கப்பட வில்லை என்று சமர்ப்பித்திருப்பதே அரச நிவாரணம் மறுக்கப்பட்டதற்கான காரணம் என்று உறுதியாகியுள்ளது. இது தகவலறியும் சட்டம் மூலம் உறுதி செய்யப்பட்ட உண்மை எனத் தெரி வித்துள்ளார்.

அந்த அறிக்கைகள் தற்போது கிடைத்துள்ள நிலையில், அதிகமான கிராம உத்தியோகத்தர்கள் பாதிப்பு இல்லை என்று அனுப்பியுள்ளனர் என் பதுஆவணரீதியாகநிரூபிக்கப்பட்டுள்ளது.

ஆனால் உண்மை நிலை வேறு. நவம்பர் 26, 27, 28 ஆகிய தினங்க ளில் பல பகுதிகளில் மின்சாரம் துண் டிக்கப்பட்டிருந்தது. மீராவோடைக்கு பின்னால் பல வீடுகள் நீரில் முழுமை





யாக மூழ்கியிருந்தன. நீரில் சுழப்பட்ட ஒரு வீட்டில் நான்கு சிறு குழந்தைகள், ஒரு சிறிய தகட்டுப் பிங்கானில் சிறிதளவு உணவைப் பகிர்ந்து உண்ட காட்சியை பார்த்த ஒருவர், என் மனம் வெந்த புண் போல மாறிவிட்டது என உணர்ச்சி பூர்வமாகக் கூறியுள்ளார்.

மின்சாரம் இல்லாத அந்த இருட் டிலும், சில மாநகரசபை உறுப்பினர்கள் ஒன்றிணைந்து, சமைத்த உணவுகளை மாநகர சபை வாகனங்களில் கொண்டு சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கியுள்ளனர். அந்த மனிதநேய நடவடிக்கைகள் சமூக ஊடகங்களிலும் பதிவாகியிருந்தன. அம்பாறை மாவட்டத் தில் கடமை புரியும் ஒரு அதிகாரி வழங் கிய தகவலின்படி, வெள்ளத்தால் பாதிக் கப்பட்ட 240 பேருக்கான நிவாரணத் தொகை, அக்கரைப்பற்று பிரதேச செயலகத்துக்கு வழங்கப்படாமலேயே திரும்பியுள்ளது என்று தெரியவந் துள்ளது.

பிரதேச செயலாளர் பல முயற்சி களை மேற்கொண்ட போதும், வேலைப் பளு அதிகரிக்கும் என்ற காரணத்தால், சில கிராம உத்தியோகத்தர் கள் திட்ட மிட்டு இதை அனுப்பியிருக்க லாம் என்ற சந்தேகம் தற்போது வலுப் பெற்று வருகிறது. இதிலேயே மிகவும் வேத னைக்குரிய விடயம் என்னவென்றால், இந்த கரையோர மக்கள் இன்னும் ஒரு நாள் அரச நிவாரணம் வரும் என்ற நம்பிக்கையோடு காத்திருக்கிறார் கள்.

வெள்ளத்தில் சொத்துகளை இழந்து, இருட்டிலும் பசியிலும் தவித்த இந்த ஏழை மக்களுக்கு, ஆவணங்களில் பாதிப்பு இல்லை என்று எழுதப்பட்ட அந்த மனநிலை அது அலட்சியமா? மனிதநேயமற்ற நிர்வாகமா? அல்லது திட்டமிட்ட துரோகமா?.

இந்தச் சம்பவம் தொடர்பாக உடனடி விசாரணை நடத்தப்"படவேண்டும். பொறுப்பற்ற அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தாமதமின்றி நிவாரணம் வழங்கப்பட வேண்டும்.– என தெரிவித்துள்ளார்.

# திருகோணமலை கரையோர மீனவர்களை பாதுகாக்க மாநகர விசேட அமர்வில் கோரிக்கை

திருகோணமலை கரையோர மீனவர்களின் கடலரிப்பு பிரச்சினை தீர்க்கப்பட்டு நிரந்தர தீர்வு வழங்க வேண்டும் என்று திருகோணமலை மாநகர சபையின் விசேட சபை அமர வின் போது பிரேரணைகள் முன் வைக்கப்பட்டுள்ளன.

குறித்த விசேட சபை அமர்வானது திருகோணமலை மாநகர முதல்வர் க.செல்வராசா தலைமையில் நேற்று இடம்பெற்ற போதே மூன்று உறுப்பினர் கள் இது குறித்து விசேட கவனம் செலுத்த வேண்டும் எனவும் பிரே ரனைகளை முன்வைத்து உரையாற் றினர்.

திருகோணமலை மாநகர எல் லைக்கு உட்பட்ட கரையோர மீனவக் கிராமங்களான மனையாவெளி, பெருந்தெரு, வீரநகர், திருக்டலூர், பள்ளத்தோட்டம், ஜமாலியா, விஜிதபுர போன்ற கரையோரப் பகுதிகளை உள் ளடக்கிய மக்கள் கடல் அரிப்பு காரண மாக பெரிதும் பாதிக்கப்பட்டுள் ளனர்.

அனர்த்தங்களுக்கு முகங்கொடுக் கும் மக்களை பாதுகாக்க வேண்டும். இதற்காக விசேடமாக குழுவொன்றை அமைத்தும் விசேட பிரச்சினையாகக் கொண்டு வெளிநாட்டு உதவிகளைத் திரட்டி இதனைப் பாதுகாக்க வேண்டும். இவ்வாறான பிரச்சினைகளுக்கு முக் கிய காரணமாக மணல் அகழ்வும் கார ணமாகவுள்ளது. தினமும் கடல் தொழில் செய்தே ஜீவனோபாயத்தை கொண்டு செல்ல வேண்டியுள்ளது. கடல் அரிப்பை பாதுகாக்க நிரந்தரமான தீர்வை முன் வைக்க வேண்டும். கரையோர தடுப்பு சுவர் கட்டாயமாக அந்தப் பகுதிகளில் அமைக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார்கள்.



# காரைதீவு பிரதேச சபையின் செயலாளர் 60 ஆவது வயதில் இன்று ஓய்வுபெற்றார்

(வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவு பிரதேச சபையின் செயலாளர் அருணாசலம் சுந்தரகுமார் இன்று வியாழக்கிழமை பொங்கலுடன் தனது அறுபதாவது வயதில் அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றார்.

அவரது இடத்துக்கு புதிய செயலாளராக திருமதி வனிதா டேவிட் அமிர்தலிங்கம் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

அவருக்கான நியமனக் கடிதத்தை சபைத்தவிசாளர் சு. பாஸ்கரன் வழங்கி வைத்தார்.

அவரது பதவியேற்பு வைபவமும் ஓய்வு பெறும் செயலாளர் சுந்தரகுமாரின் பணி நிறைவு நிகழ்வு இன்று சபையில் இடம்பெற்றன. தவிசாளரும் உப தவிசாளரும் சில உறுப்பினர்களும் சபை ஊழியர்களும் கலந்து கொண்டனர்.









# பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கான மாற்றுச் சட்டத்திலுள்ள ஆபத்து நிலை!

(பூ.லின்ரன்)

பயங்கரவாத் தடைச் சட்டத்துக்கு மாற்று சட்டமானஃளுவயு சட்டத்தின் ஆபத்து தொடர்பில் யாழில் கலந்துரையாடப்பட்டுள்ளது.



தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு மாற்றீடாக கொண்டுவரப்படவுள்ள பயங்கரவாதத்தில் இருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டம் தொடர்பான ஆபத்துக்கள் தொடர்பில் தெளிவு படுத்தும் கலந்துரையாடல் செவ்வாய்க் கிழமை யாழ். பொது நூலக மண்டபத்தில் வடக்கு கிழக்கு சிவில் ஒருங்கிணைப்பு குழு ஏற்பாட்டில் இடம் பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு மாற்றீடாக முன்மொழியப்பட்ட PSTA பயங்கரவாதத்திலிருந்து அரசை பாதுகாக்கும் சட்டமாக உள்ளது. இதுவே புதிய சட்டமாக வரவுள்ளது.

இது நாட்டின் பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டது, ஆனால் பரந்த வரையறைகள் மற்றும் கடுமையான பிரிவுகள் காரணமாக, இது பொது மக்களின் போராட்டங்கள், சிவில் சமூக செயற்பாடுகள் மற்றும் புலம்பெயர் சமூகத்தினரை குறிவைக்கக் கூடும் என கலந்துரையாடலில் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டது.

இலங்கை குடிமக்கள் வெளிநாடுகளில் இருந்தாலும் இந்த சட்டத்தின் கீழ் வருவார்கள். சமூக ஊடகங்களில் கருத்துத் தெரிவிப்பவர்களும் பாதிக்கப்படலாம் என விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.

குறித்த கலந்துரையாடலில் வளவாளராக சட்டத்தரணி ஐங்கரன் கலந்து கொண்டதுடன் பங்குபெற்றாளர்களாக பிரதேச சபைகளின் தவிசாளர்கள், சபை உறுப்பினர்கள், மகளிர் அமைப்பின் பிரதிநிதிகள், பல்கலைக்கழக மாணவர்கள், கடற் தொழில் சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் சிவில் அமைப்பின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# இராணுவ ட்ரக்குடன் மோ. சைக்கிள் மோதிய விபத்தில் ஒருவர் மரணம்!

கொக்காவில் பகுதியில் வீதியோரத்தில் நிறுத்தப்பட்டிருந்த இராணுவ ட்ரக்குடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.




இந்த விபத்து தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியாவிலிருந்து கிளிநொச்சி நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிள், கொக்காவில் பகுதியில் வீதியோரத்தில் நிறுத்தப்பட்டிருந்த இராணுவ ட்ரக்குடன் நேற்று பிற்பகல் மோதியது.

விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் கிளிநொச்சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

இவ்வாறு இறந்தவர் வவுனியாவைச் சேர்ந்த 64 வயதுடையவர் என்றும், விபத்தில் சிக்கிய இராணுவ ட்ரக் ஓட்டுநர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# காலத்தின் தேவை நீங்களும் உங்கள் பணியும்!

**-பவித் அருள்வசந்**

வடக்கு மாகாணத்தின் பெருமை கூறும் அம்சங்களில் ஒன்றாகக் காணப்படும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஒவ்வொரு ஆண்டும் 2500 இற்கும் மேற்பட்ட பட்டதாரிகளை உருவாக்கி அவர்களின் அடுத்த படி நோக்கி நகரச் செய்கிறது. அவ்வாறு எத்தனை பட்டதாரிகள் அடுத்த படி நோக்கி நகர்கின்றனர், அவர்களது நகர்வு எப்படிப்பட்டது, சமூகத்துக்கு வளம் சேர்ப்பதா?, சமூகத்தை மேம்படுத்துவதா?, குறைந்த பட்சம் அவர்களை வளர்த்தெடுத்த ஊரை வளப்படுத்துவதா? எனப் பல கேள்விகளுக்கான விடைகளை காண்பதனூடாக பல்கலைக் கழகங்களில் இருந்து வெளிவரும் பட்டதாரி சமூகத்தின் சிந்தனைகளை மதிப்பிடலாம்.

பல்கலைக்கழகப் பட்டதாரிகள் என்றால் கச்சேரிக்கு முன் பதாகைகள் தாங்கி வேலை கேட்டுப் போராட்டம் செய்பவர்கள் என்ற ஒரு போர்வையை சமூகம் பட்டதாரிகளுக்கு போர்த்திவிட்டது. வேலை வேண்டி அரசாங்கத்திடம் போராட்டம் செய்வது நியாயமா? அல்லது நியாயமில்லையா? என்ற வாதப்பிரதிவாதங்கள் சமூகத்தை இன்று ஆக்கிரமித்துள்ளன. ஆரம்பக் கல்வியிலிருந்து பல்கலைக்கழகப் பட்டப்படிப்பு வரை அரசு இலவசக் கல்வியை நாட்டுப் பிரஜைகள் அனைவருக்கும் வழங்குகின்றது. குறிப்பாக 18 வயதுக்குக் குறைந்த அனைவரும் கல்வி கற்பது அவசியம் என்று கட்டாயக் கல்வியையும் வழங்கி அதைத் தொடர்ந்து உயர்கல்வியையும் அதனோடு பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகும் மாணவர்களுக்கு மேலதிக புலமைப்பரிசில் கொடுப்பனவுகளுடன் பல்கலைக் கழகப் படிப்பையும் வழங்கி வருகிறது.

இவ்வாறு பரந்துபட்ட கல்வியையும், அறிவையும் பெற்ற பட்டதாரிகளால் சுயதொழில் வாய்ப்புக்களை உருவாக்கிக் கொள்ள முடியாதா..? தனியொரு வேலையைத் தேடிக் கொள்ள முடியாதா..? என்ற கேள்விகளை இக் கட்டுரை வாயிலாகத் தொடுக்க வேண்டிய தேவையுமுள்ளது.

சுய தொழிலை ஊக்குவிப்பதற்காக வட்டி இல்லாகக் கடன் திட்டமும் அரசால் அறிமுகப்படுத்தப் பட்டிருந்தது. இவ்வாறு பல்கலைக்கழகங்களில் இருந்து வெளியேறும் பட்டதாரிகளில் பலர் மேலதிக கல்வி , வேலைவாய்ப்பு, திருமணமுறை மற்றும் சட்டவிரோதக் குடிப்பெயர்வு மூலம் நாட்டை விட்டு வெளியேறுகின்றார்கள். நாட்டினுடைய மக்களின் வரிப்பணத்தில் கல்விகற்று அவ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டிய புலமைசாலிகளின் நிரந்தர வெளியேற்றமானது இந்நாட்டு மக்களுக்கு இழைக்கும் அநீதியாகாதா? என்ற வினாவை வாசகர்களின் சிந்தனைக்கு விட்டு விடுகின்றேன்.

இவ்வாறான விமர்சனங்களை முன்வைப்பதற்கும் இத்தகைய விடயங்கள் நடைபெறுவதற்கான தூண்டல்கள் காரணிகள் சிலவற்றையும் இந்தக் கட்டுரையில் உள்ளடக்குவதற்கு முயற்சித்துள்ளேன். ஒரு நாட்டினுடைய அரசானது அந்த நாட்டு மக்களை தொழிலுலகத்திற்கு தயார் செய்தல் வேண்டும். ஆனால் இலங்கையின் கல்வித்திட்டமானது தொழில் சார் யுகத்துக்குத் தகவுடைய கல்விசார் நபர்களையோ / பட்டதாரிகளையோ உருவாக்குவதற்கான அடித்தளத்தை வழங்கவில்லை.

கடந்தகாலங்களில் இலங்கையின் பொதுச்சேவை நிர்வாகத்தின் போது வழங்கப்பட்ட அரசியல் சார் நியமனங்களும் பட்டதாரி மாணவர்களின் போராட்டங்களுக்கு தூண்டுகோலாக அமைத்திருக்கலாம். வழங்கப்பட்ட ஏராளமான அரசியல் நியமனங்களால் குறித்த பணிக்கு தகவுடைய ஏராளமான வறிய மற்றும் நடுத்தர குடும்பங்களைச் சேர்ந்த பட்டதாரிகள் வேலைகளை இழந்து மிகவும் கடினமான சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டிருந்தார்கள். ஆகவே அரசாங்கத்தின் முறையற்ற பக்கச்சார்பான செயற்பாடுகளும் இத்தகைய சூழ்நிலைக்குக் காரணமாக அமைந்துள்ளதைக் குறிப்படுதல் அவசியமாகும்.

இலங்கை அரசினுடைய நீட்சியடைந்த உச்சபட்ச இன அடக்குமுறைக்கு எதிராக தோற்றமடைந்த உள்நாட்டுப்போரில் பாதிக்கப்பட்ட சிறுபான்மை தேசிய இனத்தவர்களில் பலர் அநேகமான ஐரோப்பிய நாடுகளுக்கு குடிபெயரத் தொடங்கியமையும், அதன் நீட்சியாகவும் அதன்மேலுள்ள மோகத்தாலும் உருவாகியுள்ள பணம்சார் வாழ்வியலும் ஏராளமான புலைமைசாலிகள் நாட்டிலிருந்து வெளியேறக் காரணமாகியுள்ளன. ஒரு நாட்டில் மக்களின் கருத்துக்களை பாதுகாப்பாக வெளிப்படுத்துவதற்கான களங்கள் இல்லையெனில் இத்தகைய விளைவுகளை தவிர்க்கவும் முடியாது.

மேலும் இலங்கையில் தனியார் துறைக்குள் உட்செல்வதற்கான தொழில் வாய்ப்புக்களும், சுய தொழிலை மேம்படுத்துவதற்கான சந்தை வாய்ப்புக்களும் மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. குறிப்பாக விவசாய வேளாண்மை பொருளாதாரத்தை ஊக்குவிக்க வேண்டிய எங்களுடைய பொருளாதாரக் கட்டமைப்பு முறை அதனை முகாமைத்துவம் செய்வதிலும் விலை நிர்ணயம் செய்வதிலும் சந்தைக்கு கொள்முதல் செய்வதிலுமுள்ள பலவீனமான அணுகுமுறையும் சுய வேலைவாய்ப்புக்கான தேடல்களைத் தவிர்க்கின்றன.

இத்தகைய காரணிகள் காணப்பட்டாலும் மக்களின் வரிப்பணத்தில் கல்வி கற்று முறையாக மக்களுக்காகவோ, தமது நாட்டிற்காகவோ, தமது சமூகத்திற்காகவோ, செயற்படாமல் நிரந்தரமாக வெளிநாடுகளுக்குச் செல்ல முயலும் பட்டதாரிகள் தங்களை மீண்டும் ஒருமுறை தங்களை மீள் பரிசீலனை செய்து கொள்ளுதல் வேண்டும்.

குறிப்பாகச் சுயநிர்ணயம் வேண்டிப் போராடும் தேசிய இனமாகிய எங்களுக்கு உங்களுடைய வெளியேற்றம் பாரிய பின்னடைவைத் தரக்கூடியது. ஒவ்வொரு மாணவர்களுக்கும் சமூகம் தொடர்பான சிந்தனையும் மக்களின் வளர்ச்சி தொடர்பான அக்கறையும் இருக்க வேண்டும் ஆகவே பட்டப் படிப்பை பூர்த்தி செய்யும் பட்டதாரிகள் சரியான விதத்தில் தமது அடுத்த படி நோக்கி நகர வேண்டும். மக்கள் பிரதிநிதிகளும் அரசும் அதற்கான முன்னகர்வுகளை மேற்கொள்ளவேண்டும்.




# போராட்டமின்றி சமூக விடுதலை இல்லை தியாகமே போராட்டத்தின் உயிர் மூச்சு...!

**நாகராசா தனுஸ்காந்,**
**ஊடகக்கற்கைகள் துறை,**
**யாழ். பல்கலைக்கழகம்.**

சமூகத்தில் அதிகார தரப்பினரின் அடக்கு முறைக்கு எதிரான போராட்ட வடிவத்தை புரட்சியாளர்களே தீர்மானிக்கின்றனர். அந்தவகையில் தியாகமே போராட்டத்தின் உயிர் மூச்சு. பல தியாகங்கள் நிறைந்த மண் இது. வடகிழக்கில் அரசியல் போராட்டத்தில் இணைந்து வீர மரணமடைந்தவர்களுக்காக மாவீரர் வாரம் (நவம்பர் இறுதி வாரம்) பெரும் எழுச்சியோடு நினைவு கூறப்படுகின்றது. அதே போன்று தெற்கில் கிளர்ச்சியில் ஈடுபட்டு மரண மடைந்த மக்கள் விடுதலை முன்னணி இளைஞர்களுக்காகவும் இல்மஹா விரு சமரும என (நவம்பர் 13 ஆம் திகதி) நினைவு நாள் அனுஷ்டிக்கப்படுகின்றது.

அரசியல் சமூக மாற்றத்துக்காக எழுவோர் அதற்கான போராட்டத்தில் வீர மரணம் அடைந்தாலும், அவர்கள் உயிர்ப்போடு, வரலாற்றை வழிநடத்துபவர்களாகவே கொள்ளப்படுவர். அதன் தொடர்ச்சியில் பலர் அத்தகைய தியாகங்களை முன்மாதிரியாகக் கொண்டு சமூகத்தை அரசியல் நாடக மேடையில் இருந்து பாதுகாத்தும் வருகின்றனர்.

இத்தகைய வீர வரலாறுகளின் பின்புலம் மலையகத் தமிழர்களுக்கும் உள்ளது. மலையகத்தின் ஒவ்வொரு தேயிலைச் செடியின் ஆணி வேரையும் மலையக உழைப்பாளர்களின் வியர்வை கலந்த இரத்தம் நனைத்து செழிப்பாக்கி, நாட்டையும் செழிப்பாக்கி கொண்டிருக்கின்றது. இதனோடு தம்மை ஒடுக்குவோருக்கு எதிராக களத்தில் நின்று போராடி, இரத்தம் சிந்தி, வரலாறு படைத்தவர்களும் உள்ளனர்.

கோவிந்தன் முதல் (1940) கண்டி பல்லேகலை தோட்டத்தில் வீரமரணமடைந்த பழனிவேல் (1980) வரை உயிர்த் தியாகமானவர்கள் மலையக போராட்ட வரலாற்றின் உயிர்ப்பு சக்தியாகவே திகழ்கின்றார்கள். இவர்களில் தூக்கு மேடையைப் பஞ்சு மெத்தையாக்கி, தூக்குக் கயிற்றை மலர் மாலைகளாக ஏற்று, மலையக போராட்ட வரலாற்றில் புதிய அத்தியாயத்தை தனதாக்கிய ஸ்டெலன் பேர்க் (கந்தலா) தோட்ட இளைஞர்களான வீராசாமி, வேலாயுதம் ஆகிய இருவரும் சிறப்பாக நினைவு கூரப்பட வேண்டியவர்கள் மட்டுமல்ல, இவர்கள் வீர மரணம் அடைந்த தினத்தை மலையக மக்கள், மலையக தியாகிகள் தினமாக்கி அடையாளப்படுத்தி வரலாறு காக்க வேண்டி இன்று வரை செயற்பட்டு வருகின்றனர்.

கொழும்பு, வெலிக்கடை சிறையில் இன்றைக்கு 79 ஆண்டுகளுக்கு முன் 1942 பெப்ரவரி 27 ஆம் திகதி வீராச்சாமியும், அடுத்த நாள் அதேநேரம் வேலாயுதமும் தூக்கிலிடப்பட்டனர். இருபத்து இரண்டே வயது நிரம்பிய தியாகி வீராச்சாமி, இராமசாமி என்பவரின் மகனாவதோடு, வேலாயுதம் அதே வயதையொத்தவர். இவரின் தந்தை ஐயம் பெருமாள் ஆவார்.

காணி உச்ச வரம்புச் சட்டத்தின் கீழ் 1970 களில் பெருந்தோட்ட தேசிய மயம் என பெருந்தோட்டங்கள் அரசுடமையாக்கப்படும்வரை, அந்தத் தோட்டத்தை நிர்வகிப்பவரின் தனி இராஜ்ஜியமாகவே அது இருந்தது. அதிலும் சுதந்திரத்துக்கு முன்னரான காலகட்டத்தில் தோட்டத் தொழிலாளர்களின் சுதந்திரத்தைப் பறித்து, அடக்குமுறையின் கீழேயே தொழிலாளர்களை வைத்திருந்தனர். இடதுசாரி சிந்தனை கொண்ட ஆங்கிலத் தோட்டத்துரையான பிறிஸ் கேடில் 1937 ஏப்ரல் 03 ஆம் திகதி நாவலப்பிட்டி நகரில் என். எம். பெரேரா தலைமையில் நடந்த பொதுக் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டார். அக்கூட்டத்தல் மேடையேறி "தோட்ட அதிகாரிகளின் அனுமதிக்க முடியாத செயல்களை நான் நன்கறிவேன். தோட்ட அதிகாரிகள் தொழில் சட்டத்தை மீறுவதற்கு இடமளிக்கக்கூடாது. தொழிலாளர்களை சிறுமைப் படுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது எனக் கூறியமை அந்தக் காலத்தில் தோட்ட அதிகாரிகளால் தொழிலாளர்கள் அனுபவித்த கொடுமையை வெளிக் கொணர்கின்றது.

அன்று பெருந்தோட்டத் தொழிலாளர்கள் "பஞ்சம் பிழைக்க வந்தவர்கள் 'கூலிகள்' என்ற மனநிலையில்

தொடர்ச்சி▼

# போராட்டமின்றி சமூக விடுதலை இல்லை தியாகமே போராட்டத்தின் உயிர் மூச்சு...!

தொடர்ச்சி▲

அதிகாரிகளால் (துரைமார்கள்) அடிமைகளாக நடத்தப்பட்டனர்.பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நிலை என்ன விதத்தில் உள்ளது? என்பதை மனித நேயம் கொண்ட விடுதலையாளர், தேசபக்தர் டாக்டர் மணிலாலுக்குக் காட்ட, நடேசய்யர் அவரை பல தேயிலைத் தோட்டங்களுக்கு அழைத்துச் சென்றதாகவும், அதன் இறுதியில் "பிஜியில் இந்தியத் தொழிலாளர்கள் இருப்பதைவிட, இலங்கையில் அதிக கேவலமான நிலையில் இருக்கின்றனர். இலங்கை நிலையை கவனிக்கும்போது பிஜி எவ்வளவோ மேல் என்பேன்" என்று மணிலால் குறிப்பிட்டார் என்று நடேசய்யர் தமது கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

மலையக பெருந்தோட்ட தொழிலாளர்கள் சில்லறை கங்காணி, கொத்தரப்பு கங்காணி, கவ்வாத்து கங்காணி, கொழுந்து கங்காணி, தோட்டக் காவலர்கள், கணக்கப்பிள்ளை, பெரிய கங்காணி, கண்டாக்கு, சின்னத்துரை, பெரியதுரை எனப் பல அடுக்கு அதிகார அடுக்கு முறையில் கொத்தடிமைகளாக வைக்கப்பட்டிருந்தனர். அத்தோடு தோட்டங்களுக்குள் வெளியார் எவரும் உத்தரவின்றி உட்பிரவேசிக்க கூடாது என தடைச்சட்டமும் விதிக்கப்பட்டு, தொழிலாளர்களும் அவர்களின் குடும்பங்களும் சிறைக் கைதிகளாகவே நடத்தப்பட்டனர் (1957 ஆம் ஆண்டே இந்தச் சட்டம் நீக்கப்பட்டது). மேலும் அரிசி, கோதுமை மா, தேயிலைத்தூள், லயத்து வீடு, குடி தண்ணீர் எல்லாவற்றையும் தோட்ட நிர்வாகத்திடம் பெற வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டு இருந்ததால், நிர்வாகக் கட்டமைப்புக்கு அடங்கிய அடிமைகளாகவே இருந்தனர். வீட்டுக்குத் தேவையான பொருள்களையும், வேறு அன்றாட பொருள்களையும், பெரிய கங்காணி மற்றும் அவர்களின் கடைகளில் கடனுக்குப் பெற்றுக் கொள்ள முடிந்தாலும், அவர்களுக்கே அடிமைகளாக வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். அதிகார கட்டமைப்பில் இருந்தும், அறியாமை மற்றும் கடன் வாழ்வில் இருந்தும் மலையகத் தொழிலாளர் வர்க்கத்தை மீட்பதற்கு, நடேசய்யரும் அவர் மனைவி மீனாட்சி அம்மாளும் அயராது உழைத்து தொழிலாளர் சமூகத்தை விழிப்படையச் செய்தனர்.

மலையக பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கென முதன் முதலாக 'அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சம்மேளனம்" எனும் தொழிற்சங்கம் 1933 இல் நடேசய்யரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. 1935 இல் உருவாக்கப்பட்ட தொழிற்சங்கச் சட்டத்தைத் தொடர்ந்து தொழிலாளர்கள், தொழிற்சங்கத்தில் இணைய அனுமதிக்கப்பட்டனர். இதே காலப் பகுதியில் கண்டியில் தலைமையகத்தைக் கொண்டிருந்த இடதுசாரியினரான சமசமாஜ கட்சியினரால் 'தோட்டத் தொழிலாளர் சங்கம்' தோற்றுவிக்கப்பட்டது. எனினும், தோட்டங்கள் தோட்டத் துரைமாரின் தனித்தனி சுகபோக அதிகார இராஜ்ஜியங்களாக திகழ்ந்ததால், தொழிற்சங்கம் அமைப்பதும், தொழிற்சங்கத்தில் இணைவதும் அவ்வளவு இலகுவாக இருக்கவில்லை. பெருந்தோட்ட உரிமையாளர்களுக்கும், மது விற்பனைக்கும், மது விற்பனையாளர்களுக்கும் நெருங்கிய உறவு இருந்த காலகட்டம் அது. இதனால், பெருந்தோட்டத் தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். மது எதிர்ப்பு நடவடிக்கையை மேற்கொள்ள, பொகவந்தலாவை பிரதேச கொட்டியாகலை தோட்ட மக்கள், தோட்டத்தில் சங்கம் அமைக்க துரையிடம் அனுமதி கேட்டபோது, "இது தோட்ட பெரிய கங்காணியின் அதிகாரங்களை வேரறுக்கும் முயற்சி" எனக் கூறி அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

ஆனால், அத்தோட்ட மக்கள் தன்னெழுச்சியோடு 1939 ஜனவரியில் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதித்துள்ளனர். இதனை "தலைவர்கள் இன்றியே, அரசியல் நோக்கங்கள் இன்றியே, இன்றைய சமுதாய சீர்திருத்தத்திற்கு மக்கள் எழத் தொடங்கிவிட்டனர்" என அரசா குறிப்பேடுகளே குறிப்பிடுவதாக கூறப்படுகின்றது. சுய கௌரவத்துடனும், மரியாதையுடனும், சுதந்திரத்தோடும், உரிமைகளோடும், பாதுகாப்புடனும் வாழவேண்டும் எனும் உணர்வு கொழுந்து விடத் தொடங்கி விட்டதற்று இது நல்ல உதாரணமாகும். இதற்கு நடேசய்யரும், இடதுசாரி தலைவர்களும் தொழிலாளர்கள் உள்ளத்தில் விதைத்த புரட்சி போராட்ட சிந்தையே காரணம் எனலாம். இதனைத் தொடர்ந்தே, ஹேவாஹெட்ட முல்லோயா தோட்ட மக்களின் 16 சத சம்பள உயர்வுக்கான போராட்டம் வெடிக்கின்றது. அதில் கோவிந்தன் உயிர்த் தியாகியாகின்றான். தொழிலாளர் கோரிக்கைகளும் வெற்றி பெறுகின்றன. இதனால் ஆத்திரமும் கோபமும் அடைந்த துரைமார், தொழிலாளரை பல்வேறு வகையில் ஒடுக்கியதோடு, தொழிலாளர் ஒன்றான சக்தியாவதை தடுக்கவும், தொழிற்சங்க நடவடிக்கைகளை தமது கைக்கூலிகளைக் கொண்டு கவனித்து, அதில் ஈடுபடுபவர்களை மறைமுகமாகவும், நேரடியாகவும் தண்டிக்கவும் திட்டந்தீட்டி செயல்பட்டனர்.

அதேநேரம் முல்லோயா கோவிந்தனின் ரத்தம் தொழிலாளர் வர்க்கத்தின் எழுச்சிக்கு உணர்வளித்து அவர்களை ஒன்று திரண்ட சக்தியாகி, போராட்டம் மூலமே உரிமைகளை பெற்றுக்கொள்ள முடியும் எனும் மனநிலையை உருவாக்கியது. கந்தலா (ஸ்டெலன் பேர்க்) தோட்டம் முல்லோயா தோட்டத்துக்கு அண்மையிலேயே உள்ளது. இங்கு உள்ள இளைஞர்களும் தொழிலாளர்களும் தனது தோட்டத்திலும், தொழிற்சங்கம் அமைக்க வேண்டும் எனும் உத்வேகத்துடன் செயல்பட்டனர். அதற்கான பல கலந்துரையாடல்களை மறைமுகமாக இரகசிய முறையில் நடத்தி, தோட்டத்தில் இயங்கிய இடதுசாரி தொழிற்சங்கமான 'தோட்டத் தொழிலாளர் தொழிற்சங்கத்தை' அமைக்க முழு நடவடிக்கைகளும் மேற்கொண்டனர். இதற்கு மெய்யப்பன் எனும் தொழிலாளி தலைமை தாங்கியதோடு, எத்தகைய எதிர்ப்பு வரினும் அதற்கு முகங்கொடுக்க இளைஞர்கள் தம்மை தயார்படுத்திக் கொண்டனர். தொழிற்சங்க சந்தா பணத்தை முறையாக வசூலித்து மெய்யப்பனிடம் கையளித்து, தமது விசுவாசத்தை வெளிப்படுத்தினர்.

தொழிலாளர்கள் தொழிற்சங்கம் அமைப்பதையோ, ஒன்று திரள்வதையோ விரும்பாத தோட்டத் துரையான சி. ஏ. ஜி. போப், தமது ஒற்றர்கள் மூலம் மக்கள் செயல்பாட்டை அறிந்து கொண்டார். தொழிற்சங்க செயற்பாட்டை தடுத்து சிதைப்பதற்கு ஒரே வழி தலைமை தாங்கும் மெய்யப்பனை தோட்டத்திலிருந்து துரத்துவது என தீர்மானித்து, 1941ஆம் ஆண்டு ஜனவரி மாதம் எத்தகைய ஒரு காரணமுமின்றி, வேலையில் இருந்து நீக்கியதோடு, அன்று நடை முறையிலிருந்த பற்றுச்சீட்டையும் கையில் கொடுத்து தோட்டத்தை விட்டே வெளியேறுமாறு பணித்தார். இதற்கு இன்னுமொரு மறைமுக காரணமும் இருந் தது. அதே தோட்டத் தொழிலாளியான வீராசாமி என்பவரே தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் செய லாளராக இயங்கினார். வீராசாமியை, துரை வேலை யில் இருந்து அகற்றிய போது அதற்கான நீதிக்காக போராடி, மீண்டும் தொழிலை பெற்றுக் கொடுத்தவர் மெய்யப்பன் ஆவார். தமது அடாவடி நிர்வாகத்துக்கு எதிராக தொழிலாளர் எழுந்துவிட்டனர், இதனை அடக்க வேண்டும் என்பதும், தனக்கு எதிராக எழுந்த மெய்யப்பனை தண்டிக்க வேண்டும் என்பதுவுமே மறைமுக காரணமாகும்.

மெய்யப்பன் தான் பணி நீக்கம் செய்யப்பட்டதற்கும்,

தொடர்ச்சி▼

# போராட்டமின்றி சமூக விடுதலை இல்லை தியாகமே போராட்டத்தின் உயிர் மூச்சு...!

தொடர்ச்சி▲

தனக்கு பற்றுச்சீட்டு கொடுத்தமைக்கும் அஞ்சவில்லை. தனக்கு நிகழ்ந்த அநீதி தமது தலைமையை ஏற்றுக் கொண்ட தமது தோட்ட மக்களுக்கு கொடுக்கப்பட்ட தண்டனையாகக் கருதி, அதற்கு எதிராக போராடுவதே ஒரே வழி என தமது தொழிற் சங்க கண்டி பணி மனையை நாடினார் மெய்யப்பன். இவ்விடயத்தில் தலையிட்ட சமசமாஜ தொழிற்சங்க பணிமனை, வேலை நீக்கம் செய்யப்பட்ட வீராசாமிக்கு சார்பாக செய்யப்பட்ட மெய்யப்பனின் செயல் சரி என்றும், மெய்யப்பனை வேலைநீக்கம் செய்து, பற்றுச்சீட்டையும் கொடுத்த துரையான சி. ஏ. ஜி. போப் துரையே பிழை என்றும், 1941.04.26ல் கடிதம் அனுப்பியது. அரச ஆதரவும், பொலிஸ் துணையும் தமக்கு இருப்பதாக நினைத்து, அடக்குமுறையை கட்டவிழ்த்து விட துணிந்து விட்ட துரை, தொழிற்சங்கம் அனுப்பிய கடிதத்தை ஏற்றுக்கொள்ளாததோடு, மெய்யப்பன் தனது உத்தரவையும் மீறி பலவந்தமாக குடியிருப் பதாகவும், உடனே கைது செய்து வெளியேற்ற வேண்டும் எனவும், கம்பளை நீதிமன்றில் பிடியாணை பிறப்பிக்க வகை செய்தார். நீதிமன்ற உத்தரவோடு 1941.05.07ஆம் திகதி கந்தலா தோட்டத்திற்கு வந்த பொலிஸார் மெய்யப்பனை கைது செய்ய முடியாது, இருக்கும் இடமும் தெரியாது வெறுமனே திரும்பினர். மெய்யப்பனின் நண்பர்களான வீராசாமி, வேலாயுதம், குப்புசாமி, இராச கவுண்டர் ஆகியோர் இரகசியமாக தோட்டத்தை விட்டு வெளியேறி, தமது தொழிற்சங்க பணிமனையில் மறைந்திருந்த மெய்யப்பனிடம், பொலிஸார் தேடி வந்து சென்ற செய்தியை அறிவித்தனர்.சமசமாஜக் கட்சியின் ஆலோசனை வழிகாட்டலின் பேரில், நீதிமன்றில் சரணடைந்த மெய்யப்பனுக்கு மே 9 ஆம் திகதி பிணை வழங்கப் பட்டது.

போப் துரை கொலை முல்லோயா கோவிந்தனின் கொலையைத் தொடர்ந்து நடைபெற்ற தொடர்ச்சியான போராட்டங்கள் பெருந்தோட்டத் துரைமாரின் அடக்குமுறை, தொழிலாளர்களின் அடிமை வாழ்க்கை என்பனவற்றை முழு நாட்டுக்கும் வெளிப்படுத்திய தோடு, முல்லோயா கோவிந்தனின் இரத்தம் பெருந் தோட்ட இளைஞர்களின் உள்ளத்தில், சுதந்திரத்திற்கும் உரிமைக்குமான போராட்ட உணர்வு தீயை சுடர் விட செய்தது. கந்தலா தோட்ட இளைஞர்களான வேலாயுதம், வீராசாமி மற்றும் அவர்களின் நண்பர்களான வேலு, ரெங்கசாமி, சின்ன முனியாண்டி ஆகியோர் தமது தோட்டத் துரையை தீர்த்து கட்டு வதன் மூலமே அனைத்து துரைமாருக்கும், தோட்டத் தில் நிலவும் அடிமை கட்டமைப்பு அதிகார வர்க்கத் துக்குத் பாடம் படிப்பிக்க முடியும் எனும் தீர்மானத்துக்கு வந்ததோடு அதற்கான சந்தர்ப்பத்துக்காக உளவு பார்த்தனர். மெய்யப்பன் நீதிமன்றில் சரணடைந்து பிணை பெற்ற 1941.05.09 ஆம் திகதி, ஆத்திரத்தில் கொதித்துக் கொண்டிருந்த வீராசாமியும், அவரது நண்பர் குழுவும் போப் துரை அன்றைய தினம் மாலையில் காரில் புறப்பட்டுச் செல்வதை அவதா னித்தனர். இதுவே நல்ல தருணம் என கருதிய வீராசாமி குழுவினர் தமது திட்டத்துக்குத் தயாராகிவிட்டனர். காரில் புறப்பட்டு சென்ற போப் துரை, நேராக பக்கத்து தோட்டமான லெவலன் தோட்டத்தில் துரையாக இருக்கும் தனது நண்பரான ஆர்.டி. பிளேக் அவர்களின் பங்களாவிற்கு சென்றவர், அங்கேயே இரவு உணவையும் முடித்துக்கொண்டு, இரவே தமது தோட்டத்துக்குப் பயணமானார். இதுவே, அவருக்கு தனது நண்பனுடனான இறுதி உணவு என்பதை நினைக்கவும் இல்லை. அறிந்திருக்கவும் இல்லை.

பாதை ஓரத்தில் காத்திருந்த வீராச்சாமி, வேலாயுதம் மற்றும் நண்பர் குழுவினர் போப் துரை வரும் பாதையின் வளைவு ஒன்றில் மரங்களை வெட்டி வீழ்த்தி பாதையை தடுத்திருந்தனர். குறிப்பிட்ட இடத்துக்கு வந்ததும் போப் துரை செய்வதறியாது காரை விட்டு இறங்கிய போது, அதற்கான தருணம் பார்த்திருந்தவர்கள் இரும்பு கம்பி, தடி என்பவற்றால் தாக்கி தமது திட்டத்தை நிறைவேற்றினர். அந்த இடத்திலேயே துரையின் உயிர் பிரிந்துவிட்டது. வீராசாமி, வேலாயுதம் குழுவினர் மறைந்து விட்டனர். இரண்டு நாள்களின் பின்னர் கொலை குழுவினர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். வேலாயுதமும், வீராசாமியும் கொலையை தாம் மட்டுமே செய்ததாக வாக்குமூலம் அளித்து, ஏனைய நண்பர்களைக் காப்பாற்றினர். தொடர்ச்சியாக நடைபெற்ற போப் துரை கொலை வழக்கின் இறுதியில் வீராசாமி, வேலாயுதம் இருவருக்கும் தூக்குத்தண்டனை விதிக் கப்பட்ட போது, அது தொடர்பாக மேன்முறையீடு செய்த போதும் பலனளிக்கவில்லை. தூக்குத் தண் டனை வெலிக்கடை சிறைச்சாலையில் 1942.02.27 ஆம் திகதி காலை 8 மணிக்கு வீராச்சாமிக்கும், அடுத்த நாள் வேலாயுதத்துக்கும் என நாள் குறிக் கப்பட்டது. தூக்குத் தண்டனைக்கு முதல் நாள் இவர்களின் இறுதி ஆசை என்னவென்று கேட்டபோது, “உலகத் தொழிலாளர்கள் நீடூழி வாழவேண்டும்” என இருவர் சார்பாக வேலாயுதம் எழுதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதன் மூலம், உலக தொழிலாளர் வர்க்க போராட்டத்தோடு தம்மையும் இணைத்துக் கொண்டு, தியாகிகளாக, தூக்கு மேடையை பஞ்சு மெத்தையாகவும், தூக்கு கயிறை மலர் மாலையா கவும் ஏற்றுக் கொண்டமை, தொழிலாளர் வர்க்கத்தின் சுதந்திரம், உரிமை என்பவற்றின் மீது கொண்ட வேட்கையையும், விடுதலை உணர்வையும், வெளிக் காட்டுகின்றது. இதனை அந்நிய ஆதிக்கத்திற்கு எதிராக மலையகத்தில் வெடித்த புரட்சி எனலாம்.

சி.ஏ.ஜி. போப் துரை கொலை வரலாற்று முக்கி யம் வாய்ந்தது என்பதால், இவ் வழக்கில் அரச சார்பு சட்டத்தரணிகளாக செயற்பட்ட அட்வகேட் ஓ.எல்.டி. க்ரஸ்டர் இவ் வழக்கின் சாட்சியின் குறிப் புக்களை தொகுத்து 1942 மே 21ஆம் திகதி நூல் வடிவில் கொண்டு வந்ததாகவும் கூறப்படுகின்றது. எதிராளியை மறைந்திருந்து தாக்கும் பாணியை 1971 மற்றும் 88-89 ஆம் ஆண்டுகளில், தெற்கின் இளைஞர் கிளர்ச்சியின் போதும், வடக்கின் யுத்தத்தின் போதும் நாம் அறிந்திருக்கின்றோம். இதே பாணி சுதந்திரத்துக்கு முன்னர் மலையகத்தில், இளை ஞர்களின் சிந்தையிலும் இருந்துள்ளது என்பதை போப் துரையின் கொலை வெளிப்படுத்துகின்றது. இதன் பின் மலையக பெருந்தோட்ட தொழிலாளரை அடிமையாக்கும் அதிகார வர்க்கக் கட்டமைப்பு ஆடிப்போனது. இதனைத்தொடர்ந்து அந்நிய ஏகாதி பத்தியத்துக்கு எதிரான எதிர்ப்பு அதிகரித்த நிலையில் தோட்டத் துரைமார் சங்கம் அரசுக்கு கொடுத்த அழுத்தம் காரணமாய், கொல்வின் ஆர்.டி. சில்வா, என். எம். பெரேரா, லென்சி குணவர்தன, எட்மன் சமரக்கொடி, பிலிப் குணவர்த்தன போன்ற இடதுசாரி தலைவர்களை கைதுசெய்து சிறையிலடைத்ததாகவும் கூறப்படுகின்றது.

மலையக உரிமைப் போராட்ட முதல் உயிர்தியாகி கோவிந்தனின் 81 ஆம் உயிர்த்தியாக அகவையிலும், தூக்குக் கயிற்றை மலர் மாலையாக ஏற்ற வீராசாமி, வேலாயுதம் ஆகியோரின் உயிர்த்தியாக 79 ஆம் அகவையிலும் இருக்கும், மலையகத் தொழிலாளர் வர்க்கமும், அவர்களின் தலைவர்களாக தம்மை அடையாளப்படுத்துவோரும், மலையக தியாகிகளின் வரலாற்றை திரும்பிப் பார்க்க வேண்டும். இவர்களை நினைத்து கௌரவப்படுத்துவதன் மூலமே புதிய தலைமுறையினரை, புதிய அரசியல் கலாச்சாரத்தை நோக்கி வழிநடத்த முடியும்.




# வடக்கு மாகாண முதலீட்டு மாநாடு 2026 யாழ்ப்பாணத்தில் 21,22 ஆம் திகதிகளில்

## பொருளாதார எதிர்காலத்திற்கு ஒரு தீர்மானகரமான களம்



- ராஜ் சிவநாதன் -

வட மாகாண முதலீட்டு மாநாடு (NIS) 2026 யாழ்ப்பாணத்தில் ஜனவரி 21 அன்று நடைபெற உள்ள நிலையில், இன்னும் ஆறு நாள்களே உள்ளன. இலங்கையின் போருக்குப் பிந்தைய பொருளாதார மாற்றப் பயணத்தில் இந்த மாநாடு ஒரு முக்கிய மைல்கல்லாக கருதப்படுகிறது. இது ஒரு சாதாரண மாநாடு அல்ல. முதலீட்டாளர்கள், தொழில்முனைவோர், கொள்கை வடிவமைப்பாளர்கள், அபிவிருத்தி கூட்டாளிகள் மற்றும் தமிழ் புலம்பெயர் சமூகத்தை ஒரே மேடையில் ஒன்றிணைத்து, வட மாகாணத்தின் எதிர்காலத்தை வடிவமைக்கும் ஒரு மூலோபாய திருப்புமுனையாக NIS 2026 அமைந்துள்ளது.

பல தசாப்தங்களாக வட மாகாணம் பயன்படுத்தப்படாத பெரும் திறன்களைக் கொண்டிருந்தாலும், சிதறிய நிர்வாக அமைப்புகள், முடிவெடுப்பாளர்களை அணுக முடியாத நிலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட முதலீட்டு வசதி இல்லாமை போன்ற காரணங்களால் பின்னடைவை சந்தித்துள்ளது. இந்த நிலையை உறுதியாக மாற்றுவதே NIS 2026 இன் நோக்கம். வட மாகாணத்தில் இதுவரை நடைபெற்ற மாநாடுகளில் முதன்முறையாக, முழுமையான முதலீட்டாளர் மையப்படுத்தப்பட்ட மாநாடாக இது அமைக்கப்பட்டுள்ளது. ஆர்வத்தை உருவாக்குவதோடு மட்டுமல்லாமல், அந்த ஆர்வத்தை நடைமுறை நடவடிக்கைகளாக மாற்றுவதற்காகவே இந்த மாநாடு வடிவமைக்கப்பட்டுள்ளது.

### முதலீட்டாளர்கள், தொழில்முனைவோர் இரு சாராருக்கும் பயனுள்ள ஒரு மேடை

நிலையான பிராந்திய வளர்ச்சிக்கு முதலீட்டாளர்களும் தொழில்முனைவோரும் அளிக்கும் பங்களிப்பு மிக முக்கியமானது. இந்த உண்மையை மையமாகக் கொண்டு NIS 2026 அமைக்கப்பட்டுள்ளது. உள்ளூர் மற்றும் சர்வதேச முதலீட்டாளர்கள், அரசாங்க அதிகாரிகள், மாகாண தலைமைத்துவம், தனியார் துறை பிரதிநிதிகள் மற்றும் நிறுவனத் தரப்பினருடன் ஒரே கூரையின் கீழ் நேரடியாக கலந்துரையாடுவதற்கான அபூர்வ வாய்ப்பை இந்த மாநாடு வழங்குகிறது.

சிறு மற்றும் நடுத்தர தொழில்கள், தொடக்க நிறுவனங்கள், இளங்கலை மற்றும் பட்டதாரி மாணவர்கள் உள்ளிட்ட தொழில்முனைவோர், உண்மையான முதலீட்டு வாய்ப்புகள், கொள்கை விளக்கங்கள், நிதி வழித்தடங்கள் மற்றும் வழிகாட்டுதல் ஆகிய வற்றை நேரடியாக அறிந்து கொள்ள முடியும். அனுமதிகள், கூட்டாண்மைகள் மற்றும் நீண்டகால வளர்ச்சியை தீர்மானிக்கும் முடிவெடுப்பாளர்களை நேரடியாக சந்திக்கும் வாய்ப்பு பலருக்கு இதுவே முதன்முறையாக இருக்கும்.

இந்த மாநாடு எதிர்காலத்தை நோக்கி அமைக்கப்பட்ட ஓர் ஊக்கமளிக்கும் நிகழ்வாகும். இது நம்பிக்கையை உருவாக்குகிறது, புதுமைகளை ஊக்குவிக்கிறது. மற்றும் வட மாகாணம் தீவிரமான முதலீடுகளை ஏற்றுக்கொள்ள தயாராக உள்ளது என்ற வலுவான செய்தியை வெளிப்படுத்துகிறது.

### ஆளுநர் அலுவலகத்தில் ஒரே மைய செயலகம்

NIS 2026 இன் முக்கியமான பெறுபேறுகளில் ஒன்றாக, முதலீட்டாளர்கள் மற்றும் திட்ட முன்மொழிவாளர்களுக்காக உருவாக்கப்பட்ட தனிப்பட்ட செயலகம் ஆளுநர் அலுவலகத்தில் நிறுவப்பட உள்ளது. இந்த செயலகம், வட மாகாணத்தில் எதிர்கால முதலீட்டு திட்டங்களை முன்னெடுக்க விரும்பும் அனைவருக்கும் ஒரே மைய ஒருங்கிணைப்பு நிலையமாக செயல்படும்.

தொடர்ச்சி▼

# வடக்கு மாகாண முதலீட்டு மாநாடு 2026 யாழ்ப்பாணத்தில் 21,22 ஆம் திகதிகளில்

தொடர்ச்சி▼

இந்த முயற்சி முன்னுதாரணமற்றது. முதலீட்டாளர்கள் முதன்முறையாக, சம்பந்தப்பட்ட அரசுத் துறைகளுடன் நேரடியாக தொடர்பு கொள்ளவும், திட்ட முன்னேற்றங்களை கண்காணிக்கவும், ஒழுங்குமுறை தேவைகளை தெளிவுபடுத்தவும், நிர்வாக தடைகளை தீர்க்கவும் ஒரு மையப்படுத்தப்பட்ட நிறுவன அமைப்பைப் பெறுகின்றனர். மாநாட்டின் இரண்டு நாள்களுடன் இந்த முயற்சி முடிவடையாது. NIS 2026 உருவாக்கும் வேகமும் தாக்கமும் தொடர்ந்து நிலைத்திருக்க இந்த செயலகம் ஒரு நிரந்தர பாரம்பரியமாக அமையும்.

### ஒரு நிகழ்வைத் தாண்டிய கட்டமைப்பு மாற்றம்

NIS 2026 ஒரு சின்ன நிகழ்வாகவோ அல்லது ஒருமுறை நடைபெறும் விளம்பர முயற்சியாகவோ அல்ல. இது பிராந்திய வளர்ச்சியை அணுகும் முறையில் ஓர் அடிப்படை கட்டமைப்பு மாற்றமாகும். கொள்கை, நிர்வாகம், முதலீடு மற்றும் தொழில் முனைவு ஆகியவற்றை ஒரே சூழலில் ஒருங்கிணைப்பதன் மூலம், வட மாகாணத்தை போட்டித்திறன் கொண்ட, நம்பகமான முதலீட்டு இலக்காக உருவாக்குவதற்கான முதல் ஒருங்கிணைந்த முயற்சியாக இந்த மாநாடு அமைகிறது.

### பங்கேற்கும் அழைப்பு

NIS 2026 என்பது யோசனைகள் நிறுவனங்களுடன் சந்திக்கும் இடம். கனவுகள் வாய்ப்புகளுடன் இணையும் தருணம். வட மாகாணத்தின் எதிர்காலம் உறுதியான வடிவம் பெறத் தொடங்கும் மேடை. எல்லோரையும் பங்கேற்க அழைப்பு விடுக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் உள்ள திருவள்ளுவர் கலாச்சார மையத்தில் ஜனவரி 21-22 ஆம் திகதிகளில் வட மாகாண முதலீட்டு மாநாடு (NIS26) நடைபெறும் என்று முகாமைத்துவக் கழகம் (TMC) அறிவித்துள்ளது. முன்னுரிமைத் துறைகளில் கவனமாக நிர்வகிக்கப்பட்ட, வங்கி வாய்ப்புகளுடன் தேசிய மற்றும் சர்வதேச முதலீட்டாளர்களை இணைப்பதன் மூலம் வடக்கு மாகாணத்தை ஒரு முதலீடு மற்றும் வர்த்தக மையமாக மாற்றுவதற்கான ஒரு தளமாக இது கருதப்படுகிறது.

இரண்டு நாள் நிகழ்ச்சியானது, உயர் மட்ட கொள்கை உரையாடல், துறை குழுக்கள், திட்ட காட்சிப்படுத்தல்கள் மற்றும் இலக்கு வைக்கப்பட்ட B2B ஈடுபாட்டிற்காக அரசாங்கத் தலைவர்கள், தனியார் துறை நிர்வாகிகள், முதலீட்டாளர்கள், இராஜதந்திரிகள், மேம்பாட்டு கூட்டாளிகள், புதுமைப்பித்தர்கள் மற்றும் கல்வியாளர்களை ஒன்றிணைக்கும்.

"வடக்கு மாகாணம் இயற்கை வளங்கள், ஆழமான கலாச்சார பாரம்பரியம் மற்றும் மீள்தன்மை கொண்ட மனித மூலதனம் ஆகியவற்றால் வளமாக வளப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இணைப்பு, துறைமுக அணுகல் மற்றும் கொள்கை ஊக்கத்தொகைகளில் சமீபத்திய முன்னேற்றங்கள் இதை அதன் திறனை முன்னிலைப்படுத்த ஒரு சரியான தருணமாக ஆக்குகின்றன," என்று முகாமைத்துவக் கழகத்தின் செய்தித் தொடர்பாளர் கூறினார்.




நிலையான வேலைகள், நிறுவனங்கள் மற்றும் சமூக செழிப்புக்கு வாய்ப்பை மொழிபெயர்க்கும் கூட்டாண்மைகளை NIS26 ஊக்குவிக்கும்.

பங்கேற்பாளர்களிடையே பயனுள்ள தகவல் தொடர்பை உறுதி செய்வதற்காக NIS அமர்வுகள் ஆங்கிலம் மற்றும் தமிழில் நடத்தப்படும். பல்வேறு பங்குதாரர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 400க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# கல்முனை பொலிஸ் நிலைய முதலாவது தைப்பொங்கல் விழா





(பாறுக் ஷிஹான்)

தமிழர் திருநாளான தைப்பொங்கல் விழா முதன் முறையாக கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தில் இன்று வியாழக்கிழமை பொலிஸ் நிலைய முன்றலில் இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே.இப்னு அசாரின் வழிகாட்டலில் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.ஏ. எல்.லசந்த களுஆராச்சி தலைமையில் பொங்கல் பொங்கி சூரியனுக்கு நன்றி செலுத்தப்பட்டது.

பொலிஸ் நிலைய இந்து உத்தியோகத்தர் மற்றும் ஏனைய சமயங்களைச் சார்ந்த உத்தியோகத்தர்கள் பங்கு கொண்டிருந்த இந்த நிகழ்வு கல்முனை ரோயல் விளையாட்டு கழக அனுசரணையுடன் நடைபெற்றது. தைப்பொங்கல் விசேட பூஜை வழிபாடுகள் சிறப்பாக இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இதன்போது பொலிஸ் உயரதிகாரிகள் கல்முனை ரோயல் விளையாட்டு கழக உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். தொடர்ந்து தைபொங்கல் விசேடசமய வழிபாடுகள் நடைபெற்றதுடன் விசேட பூஜை வழிபாடுகளில் பொலிஸார்“ உட்பட பொது மக்களும் ஈடுபட்டிருந்தனர்.



# பூகோள மயமாதலும் காலநிலை மாற்றங்களும்

இன்றைய உலகம் எதிர்கொண்டு வரும் மிகப்பெரிய சவால்களில் ஒன்றாக காலநிலை மாற்றம் உருவெடுத்துள்ளது. குறிப்பாக இது மனிதன் தனது வளர்ச்சி என்ற பெயரில் மேற்கொண்ட நடவடிக்கைகளின் விளைவாக உருவான ஒரு உலகளாவிய நெருக்கடியாகும்.

அதாவது பூகோளமயமாதல் என்ற கருத்து உலகம் முழுவதும் பரவிய பிறகு, மனித வாழ்க்கை முறைகள், உற்பத்தி முறைகள், நுகர்வு பழக்கங்கள் அனைத்தும் படிப்படியாக மாற்றமடைந்தன. அந்த மாற்றங்களின் நேரடி மற்றும் மறைமுக விளைவாகவே இன்று பூமி கடுமையான காலநிலை மாற்றங்களை எதிர்கொண்டு வருகிறது.

பூகோளமயமாதல் என்பது உலக நாடுகள் பொருளாதாரம், தொழில்நுட்பம், வர்த்தகம், தகவல் தொடர்பு மற்றும் கலாசாரம் ஆகிய துறைகளில் ஒன்றோடொன்று இணைவதைக் குறிக்கும். இந்த இணைப்பு உலக மக்களுக்கு பல வாய்ப்புகளை வழங்கியதுடன், வேகமான தொழில்மயமாக்கலையும் உருவாக்கியது. ஆனால் இந்த வளர்ச்சி இயற்கையை மையமாகக் கொள்ளாமல், இலாபத்தையும் உற்பத்தியையும் மட்டுமே நோக்கமாகக் கொண்டமையால், சுற்றுச்சூழலின் மீது மிகப் பெரிய அழுத்தம் ஏற்பட்டது. அதன் விளைவாகவே காலநிலை மாற்றம் என்ற உலகளாவிய பிரச்சினை தீவிரமடைந்துள்ளது.

பூகோளமயமாதலின் முக்கிய அடையாளமாக விளங்கும் தொழில்மயமாக்கல், பச்சை வீட்டு வாயுக்களின் வெளியீட்டை அதிகரித்துள்ளது. தொழிற்சாலைகள், மின் உற்பத்தி நிலையங்கள், வாகனப் போக்குவரத்து, விமானப் பயணம் போன்றவை பெருமளவில் கார்பன்னீரெக்சைட், மீத்தேன், நைட்ரஸ் ஆக்சைடு போன்ற வாயுக்களை வளிமண்டலத்தில் வெளியிடுகின்றன.

இந்த வாயுக்கள் பூமியிலிருந்து வெளிவரும் வெப்பத்தை வெளியே செல்ல விடாமல் தடுத்து, பூமியின் வெப்பநிலையை அதிகரிக்கின்றன. இதுவே உலக வெப்பமயமாதலாகும். உலக வெப்பமயமாதல் காலநிலை மாற்றத்தின் அடிப்படைக் காரணமாக விளங்குகிறது.

பூகோளமயமாதலால் உலகம் முழுவதும் ஏற்பட்ட காடழிப்பும் காலநிலை மாற்றத்தை வேகப்படுத்தியுள்ளது. பன்னாட்டு நிறுவனங்கள், தொழிற்சாலைகள், நகர விரிவாக்கம் மற்றும் விவசாய நிலங்களின் விரிவாக்கம் ஆகிய காரணங்களுக்காக காடுகள் அழிக்கப்பட்டன. காடுகள் கார்பனீரொக்சைட்டை உறிஞ்சும் இயற்கை வளங்களாகும். அவை அழிக்கப்படுவதால் வளிமண்டலத்தில் கார்பன் அளவு அதிகரித்து, காலநிலை மாற்றம் தீவிரமடைகிறது. மேலும் காடழிப்பு மழைப்பொழிவின் ஒழுங்கின்மையையும், வறட்சியையும் உருவாக்குகிறது.

பூகோளமயமாதலின் தாக்கம் விவசாயத் துறையிலும் தெளிவாகக் காணப்படுகிறது. பாரம்பரிய விவசாய முறைகள் மாற்றமடைந்து, வணிக நோக்குடைய விவசாயம் வளர்ச்சி பெற்றது.

அதிக விளைச்சலை நோக்கமாகக் கொண்டு இரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லிகள் அதிகமாக பயன்படுத்தப்படுகின்றன. இதன் விளைவாக மண் வளம் குறைந்து, நிலத்தடி நீர் மாசுபட்டு, மேலும் விவசாயத்திலிருந்து வெளியேறும் மீத்தேன் போன்ற வாயுக்கள் காலநிலை மாற்றத்தை மேலும் தீவிரப்படுத்துகின்றன.

மேலும் காலநிலை மாற்றத்தால் மழை காலங்களில் ஏற்பட்ட மாற்றங்கள் விவசாய உற்பத்தியைக் கடுமையாகப் பாதித்துள்ளன. இது உணவுப் பாதுகாப்புக்கும் பெரும் அச்சுறுத்தலாக உள்ளது.

உலக வெப்பமயமாதலின் காரணமாக பனிப்பாறைகள் உருகி, கடல் மட்டம் உயர்ந்து வருகிறது. இதன் விளைவாக கடலோர பகுதிகள் வெள்ள அபாயத்திற்கு உள்ளாகின்றன. தீவுகள் மூழ்கும் நிலை உருவாகியுள்ளது. குடிதண்ணீர் வளங்களில் உப்பு கலப்பு ஏற்பட்டு, குடி தண்ணீர் பற்றாக்குறை அதிகரிக்கிறது.

இலங்கை போன்ற தீவுநாடுகள் இந்த நிலைமையால் கடுமையாக பாதிக்கப்படுகின்றன. மீன்வளமும் கடல் சார்ந்த வாழ்வாதாரங்களும் சீரழிவை சந்தித்து வருகின்றன.

இது தவிர பூகோளமயமாதலால் உருவான காலநிலை மாற்றத்தின் மற்றொரு முக்கிய விளைவு தீவிரமான வானிலை நிகழ்வுகளாகும். பெருவெள்ளங்கள், வறட்சிகள், புயல்கள், வெப்ப அலைகள் போன்றவை முன்பை விட அதிகமாகவும், கடுமையாகவும் நிகழ்கின்றன. இவ்வகை இயற்கை பேரழிவுகள் மனித உயிர்களையும், சொத்துகளையும் மட்டுமன்றி, நாடுகளின் பொருளாதாரத்தையும் பெரிதும் பாதிக்கின்றன.

குறிப்பாக வளர்ந்து வரும் நாடுகள் இந்த பேரழிவுகளின் தாக்கத்தை அதிகமாக அனுபவிக்கின்றன.

காலநிலை மாற்றம் உயிரின பல்வகைமைக்கும் பெரும் அச்சுறுத்தலாக உள்ளது. வெப்பநிலை மாற்றம், மழை ஒழுங்கின்மை,

தொடர்ச்சி▼



# பூகோள மயமாதலும் காலநிலை மாற்றங்களும்

**தொடர்ச்சி▲**

அதிகமான மழை வீழ்ச்சி மற்றும் வாழ்விட அழிவு காரணமாக பல உயிரினங்கள் இடம்பெயர வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றன. சில உயிரியல் இனங்கள் முற்றிலும் அழிவை சந்தித்து வருகின்றன. இது சூழலியல் சமநிலையை சீர்குலைத்து, மனித வாழ்க்கையையும் மறைமுகமாகப் பாதிக்கிறது.

இயற்கையின் இந்த சீர்குலைவு நீண்ட காலத்தில் மனித சமூகத்துக்கே பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.

பூகோளமயமாதலால் உருவான காலநிலை மாற்றம் சமூக மற்றும் பொருளாதார சமத்துவமின்மையையும் அதிகரிக்கிறது. அதிக அளவில் மாசுபாட்டை ஏற்படுத்தும் வளர்ந்த நாடுகள் அதன் விளைவுகளை குறைவாக அனுபவிக்கின்றன.

ஆனால் வளர்ந்து வரும் நாடுகள் அதிகமாக பாதிக்கப்படுகின்றன. காலநிலை மாற்றத்தின் காரணமாக மக்கள் தங்கள் வாழ்விடங்களை இழந்து, காலநிலை அகதிகளாக மாறும் நிலை உருவாகியுள்ளது. இது எதிர்காலத்தில் உலக அரசியல் மற்றும் சமூக அமைப்புகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

இலங்கைச் சூழலில் பார்க்கும் போது, காலநிலை மாற்றத்தின் தாக்கம் தெளிவாகக் காணப்படுகிறது. மழை காலங்களில் ஏற்பட்ட மாற்றங்கள், சில பகுதிகளில் கடும் வறட்சி, சில பகுதிகளில் பெருவெள்ளம் போன்ற நிலைமைகளை உருவாக்கியுள்ளது. விவசாய உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. மேலும் வெப்பநிலை உயர்வின் காரணமாக டெங்கு போன்ற நோய்களின் பரவல் அதிகரித்துள்ளது. இவை அனைத்தும் பூகோளமயமாதலால் உருவான காலநிலை மாற்றத்தின் பிரதிபலிப்புகளாகும்.

இந்த நிலையில் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வது மனித சமூகத்தின் முக்கிய பொறுப்பாகும். புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளங்களைப் பயன்படுத்துதல், காடுகளைப் பாதுகாத்தல், சுற்றுச்சூழல் நட்பு தொழில் நுட்பங்களை ஊக்குவித்தல், நிலைத்த வளர்ச்சி கொள்கைகளை நடைமுறைப்படுத்தல் போன்றவை அவசியமாகின்றன. மேலும் உலக நாடுகள் ஒன்றிணைந்து செயற்படாமல் போனால், இந்த பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது.

எனவேதான், பூகோளமயமாதல் மனித சமூகத்துக்குப் பல நன்மைகளை அளித்திருந்தாலும், அதனுடன் இணைந்து காலநிலை மாற்றம் என்ற பெரும் அபாயத்தையும் உருவாக்கியுள்ளது. இயற்கையை புறக்கணித்து முன்னேறிய வளர்ச்சி நீடித்ததல்ல. அதனால் மனிதன் இயற்கையின் ஒரு அங்கம் என்பதை உணர்ந்து, இயற்கையுடன் ஒத்திசைந்த வளர்ச்சி பாதையை தேர்ந்தெடுத்தால் மட்டுமே எதிர்கால தலைமுறைக்கு பாதுகாப்பான உலகை வழங்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

**சண்சியா வரதராசன்,**
**ஊடகக் கற்கைகள் துறை,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

# தமிழகத்தில் சமத்துவப் பொங்கலை கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்

## முதல்வர் ஸ்டாலின் தெரிவிப்பு



தமிழகம் முழுவதும் நாம் சமத்துவப் பொங்கலைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று சமத்துவப் பொங்கல் பண்டிகையைக் கொண்டாடினார். பின்னர் நடைபெற்ற நாகஸ்வர இசை நிகழ்ச்சியை முதல்வர் ஸ்டாலின் கேட்டு ரசித்ததுடன், தலைமைச்செயலர், துறைச் செயலர்கள், துறைத் தலைவர்கள், அரசு உயரதிகாரிகள், தலைமைச் செயலக அலுவலர்களுக்கு பொங்கல் வாழ்த்துகளை தெரிவித்தார். அதன்பின் மு.க.ஸ்டாலின் உரையாற்றுகையில்,

“தமிழகம் முழுவதும் நாம் சமத்துவப் பொங்கலைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். “எல்லோர்க்கும் எல்லாம்” என்ற இலக்கை நோக்கி, சமத்துவ நிலையை அனைவரும் அடையும் நோக்கத்தோடு, நமது அரசு பணியாற்றிக் கொண்டிருக்கிறது இன்னும் சொல்லப் போனால் உழைத்துக் கொண்டிருக்கிறது. உழைத்துக் கொண்டிருப்பவர்கள் என்றால் நாங்கள் மட்டுமல்ல, நீங்களும் சேர்ந்துதான் உழைத்துக் கொண்டிருக்கிறீர்கள்.

தமிழக மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகத் தலைமைச் செயலகத்தில் நீங்கள் எல்லோரும் நேரம், காலம் பார்க்காமல், உழைத்துக் கொண்டிருக்கிறீர்கள். அப்படிப்பட்ட உங்களோடு, இந்த பொங்கலை கொண்டாடுவதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.” என்று தெரிவித்துள்ளார்.

# அவனியாபுரம் ஜல்லிக்கட்டு கோலாகலம்: 1000 காளைகள், 600 வீரர்கள் களத்தில்





தைத்திருநாளை முன்னிட்டு மதுரை மாவட்டத்தில் ‘அவனியாபுரம் ஜல்லிக்கட்டு’ இன்று காலை 7 மணிக்கு கோலாகலமாக தொடங்கியது. சுமார் 1000 காளைகளும், 600 மாடுபிடி வீரர்களும் இதில் களம் கண்டுள்ளனர்.

ஜல்லிக்கட்டு போட்டி தொடங்குவதற்கு முன்னதாக, அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் மாவட்ட ஆட்சியர் பிரவீன், மாநகராட்சி ஆணையர் சித்ரா விஜயா, போலிஸ் ஆணையர் லோகநாதன், ராஜன் செல்லப்பா எம்எல்ஏ முன்னிலையில் மாடுபிடி வீரர்கள் உறுதிமொழி ஏற்றனர். இதைத்தொடர்ந்து போட்டியை அமைச்சர் பி.மூர்த்தி, ஆட்சியர் பிரவீன் ஆகியோர் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

அவனியாபுரத்தில் உள்ள பல்வேறு கோயில்களின் காளைகள் முதலாவதாக அவிழ்த்து விடப்பட்டன. தொடர்ந்து மற்ற காளைகள் அவிழ்த்துவிடப்பட்டன.

ஒவ்வொரு சுற்றிலும் 100 காளை அவிழ்க்க இலக்கு நிர்ணயத்து மொத்தம் 12 சுற்றுகளாக அவனியாபுரம் ஜல்லிக்கட்டு திட்டமிடப்பட்டுள்ளது.

முதல் 5 சுற்று முடிவில் 500 காளைகள் அவிழ்க்கபட்டன. வாடிவாசலில் துள்ளி பாய்ந்த காளைகளின் திமில் பிடித்து அடக்கிய வீரர்களுக்கு தங்க காசு உள்ளிட்ட பல்வேறு பரிசுகள் வழங்கப்பட்டன. பிடிபடாத காளைகளின் உரிமையாளர்களுக்கும் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

இம்முறை மாடுபிடி வீரர்கள் ஒவ்வொரு சுற்றிலும் எத்தனை காளைகள் அடக்கினர் என்ற விவரம் டிஜிட்டல் திரை மூலம் ஒளிபரப்பப்படுவது குறிப்பிடத்தக்கது.

இப்போட்டியை மதுரை மற்றும் சுற்று வட்டார பகுதிகளை சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு பார்க்கின்றனர். வெளிநாட்டு சுற்றுலா பயணிகளும், குஜராத் உள்ளிட்ட வெளிமாநிலங்களை சேர்ந்தவர்களும் ஆர்வமுடன் கண்டு களிக்கின்றனர்.

ஜல்லிக்கட்டு பேரவை தலைவர் ராஜசேகர் உள்பட முக்கிய பிரமுகர்களின் காளைகளும் இந்த போட்டியில் பங்கேற்றுள்ளன.

ஜல்லிக்கட்டு நடைபெறும் அவனியாபுரத்தில் 108 நோயாளர் காவுவண்டிகள் 12, மருத்துவ பணியாளர்கள் 40 பேர் என மருத்துவ குழுவினர் தயார் நிலையில் உள்ளனர்.

களத்தில் வீரர்களுக்கு காயம் ஏற்படும் பட்சத்தில், அவர்களுக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு, அருகில் உள்ள அரசு சிறப்பு முதலுதவி மையத்தில் அனுமதிக்கப்படுவார்கள். மேல் சிகிச்சை தேவைப்படும்பட்சத்தில் மதுரை அரசு ராஜாஜி மருத்துவக் கல்லூரிக்கு ஆம்புலன்ஸ் மூலம் அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

காயமடையும் காளை மாடுகளை உடனடியாக மருத்துவ சிகிச்சைக்கு கொண்டு செல்லும் வகையில் கால்நடை காவுவண்டிகளும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.





# ஈரான் அரசுக்கு எதிரான போராட்டங்கள் நிறுத்தம்

ஈரானில் நடைபெற்று வரும் அரசாங்க எதிர்ப்பு போராட்டங்கள் மற்றும் போராட்டக்காரர்கள் கொல்லப்படும் சம்பவங்கள் நிறுத்தப்பட்டுள்ளன என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

## ட்ரம்ப் தகவல்

மேலும் நெருக்கடி எவ்வாறு உருவாகிறது என்பதை தான் கண்காணிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஈரானியவெளியுறவுத்துறைஅமைச்சர் அப்பாஸ் அரகச்சி இந்த விவகாரத்தில் மரணதண்டனை நிறைவேற்றும் திட்டம் ஏதும் இல்லை என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார் எனவும் வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# 150 ஆண்டுக்குப் பிறகு ஸ்பெயினின் மகாராணியாகின்றார் லியோனர்!



ஐரோப்பிய யூனியனில் அங்கம் வகிக்கும் ஸ்பெயின், சுமார் 150 ஆண்டுகளுக்குப் பிறகு தனது முதல் மகாராணியைக் காண இருக்கிறது. தற்போதைய மன்னர் ஆறாம் பிலிப் மற்றும் ராணி லெட்டிசியாவின் மூத்த மகளான 20 வயது இளவரசி லியோனர், ஸ்பெயினின் அடுத்த வாரிசாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளார்.

இதன்மூலம் 1800 களில் ஆட்சி செய்த இரண்டாம் இசபெல்லாவுக்குப் பிறகு லியோனர் ஸ்பெயினின் மகாராணி யாவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

18 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்து, ஸ்பெயினின் மகுடம் 'ஹவுஸ் ஆஃப் போர்பன்' வம்சத்தின் வசம் உள்ளது. பிரான்சிஸ்கோ பிராங்கோவின் சர்வாதிகார ஆட்சிக்குப் பிறகு, 1975 இல் முதலாம் ஜ/வான் கார்லோஸ் தலைமையில் முடியாட்சி மீண்டும் நிலைநாட்டப்பட்டது.

அவர் 2014 இல் தனது மகன் ஆறாம் பிலிப்புக்காக தனது பதவியைத் துறந்தார். மன்னர் பிலிப் 2004 இல் பத்திரிகையாளரான லெட்டிசியாவைத் திருமணம் செய்தார். இவர்களுக்கு லியோனர் உட்பட இரு மகள்கள் உள்ளனர்.

# முதல் முறையாக குறைந்த விலையில் ஒலிம்பிக் நுழைவுச்சீட்டுக்கள் விற்பனை

2028 ஆம் ஆண்டு அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளுக்கான நுழைவுச் சீட்டு முன்பதிவு குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன.

ஒலிம்பிக் வரலாற்றில் முதல் முறையாக 10 லட்சம் நுழைவுச்சீட்டுக்கள் வெறும் 28 அமெரிக்க டொலர்கள் (சுமார் 8,500 ரூபா) என்ற மிகக்குறைந்த விலையில் விற்பனை செய்யப்படவுள்ளன.

மொத்தநுழைவுச்சீட்டுக்களில்மூன்றில் ஒரு பகுதி 100 டொலருக்கும் குறைவான விலையிலேயே இருக்கும் என உறுதி அளிக்கப்பட்டுள்ளது.



ஆர்வமுள்ள விளையாட்டு ரசிகர்கள் ஜனவரி 14 முதல் மார்ச் 18, 2026 வரை அதிகாரப்பூர்வ இணையதளத்தில் (tickets.la28.org) பதிவு செய்யலாம். இது ஒரு 'சீரற்ற குலுக்கல்' முறையாகும்.

முன்கூட்டியே பதிவு செய்வதால் எந்த முன்னுரிமையும் கிடைக்காது.

மார்ச் 18 க்குள் பதிவு செய்யும் அனைவருக்கும் சமமான வாய்ப்பு உண்டு.

குலுக்கலில் தேர்ந்தெடுக்கப் படுபவர்களுக்கு ஏப்ரல் மாதம் மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்பட்டு, நுழைவுச்சீட்டுக்கள் வாங்குவதற்கான ஒரு குறிப்பிட்ட நேர ஒதுக்கீடு வழங்கப்படும்.

தொடக்க விழா மற்றும் தடகளப் போட்டிகள் புகழ்பெற்ற டியு மெமோரியல் கொலிசியம் மைதானத்தில் நடைபெறும்.

படகுப் போட்டிகள் மட்டும் ஒக்லஹோமா நகரில் நடத்தப்படவுள்ளன.

மாற்றுத்திறனாளிகளுக்கான பராலிம்பிக் போட்டிகளுக்கான நுழைவுச்சீட்டு விற்பனை 2027 ஆம் ஆண்டு தொடங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கனடா முரசு

பக்கங்கள் - 02

வியாழக்கிழமை 15/01/2026

## கனடாவின் க்யூபெக் மாகாண முதல்வர் லெகோ பதவி விலகல்



C2▶



# அமெரிக்கா - மெக்சிகோ - கனடா வர்த்தக ஒப்பந்தம் அவசியமற்றது

## ட்ரம்ப் தெரிவிப்பு

அமெரிக்கா - மெக்சிகோ - கனடா வர்த்தக ஒப்பந்தம் (USMCA) அமெரிக்காவுக்கு பொருத்தமற்றது என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அதனை கனடா மட்டுமே விரும்புகிறது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

உற்பத்தி நிறுவனங்கள் அமெரிக்காவிற்கே திரும்பி வர வேண்டும் என்ற தனது நிலைப்பாட்டை வலியுறுத்தும் வகையில் அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

C2▶

# கனடாவையும் நேரடிக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர ட்ரம்ப் முயற்சி செய்யலாம்

## கனேடியர்கள் கருத்து

ட்ரம்ப் கனடாவையும் தனது நேரடி கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சி செய்யலாம்என மூன்றில் ஒரு பங்கு கனேடியர்கள் கருதுகின்றனர் என சமீபத்திய ஆய்வொன்று தெரிவிக்கிறது.

அமெரிக்க அதிகாரிகள் வெனிசுலாவுக்குள் நுழைந்து அந்நாட்டின் ஜனாதிபதியைக் கைது செய்து கொண்டு வந்த விடயம் பல நாடுகளுக்கு கவலையை உருவாக்கியுள்ளது.

இந்நிலையில், அமெரிக்கா வெனிசுலா விடயத்தில் தலையிட்டது அந்நாட்டின் இறையாண்மையை மீறும் விடயம் என தாங்கள் கருதுவதாக சமீபத்திய ஆய்வொன்றில் 53 சதவிகித கனேடியர்கள் தெரிவித்துள்ளார்கள்.

அமெரிக்காவின் அந்த நடவடிக்கை, மற்ற நாடுகளும் இதேபோல செயல்பட ஒரு மோசமான முன்னுதாரணமாக அமைந்துவிடலாம் என்றும் கனேடியர்கள் தெரிவித்துள்ளார்கள்.

அத்துடன், ட்ரம்ப் எதிர்காலத்தில் கனடாவையும் தன் நேரடி கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சி செய்யலாம் என தாங்கள் கருதுவதாகவும் 31 சதவிகித கனேடியர்கள் தெரிவித்துள்ளார்கள்.

அமெரிக்க அரசின் நடவடிக்கை அமெரிக்கா மீதான எண்ணத்தை மோசமானதாக்கியுள்ளதாக 37 சதவிகிதம் பேர் தெரிவித்துள்ளார்கள்.



மேலும், மூன்றில் இரண்டு பங்கு கனேடியர்கள், வெனிசுலாவின் எண்ணெய் வளத்தை கட்டுப்பாட்டுக்குள் எடுப்பதற்காகவே அமெரிக்கா அந்நாட்டு விடயத்தில் தலையிட்டதாக தாங்கள் கருதுவதாகவும் தெரிவித்துள்ளார்கள்.

# ஈரான் தூதுரக வளாகத்திற்குள் அத்துமீறி பிரவேசித்தவர் கைது



கனடாவின் ஒட்டாவா நகரில் மூடப்பட்ட நிலையில் உள்ள ஈரான் தூதரகத்தில், அரசுக்கு எதிரான போராட்டத்தின் போது சேதப்படுத்தல் சம்பவம் நடந்ததையடுத்து, அத்துமீறல் தொடர்பான குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஜனவரி 12 ஆம் திகதி காலை 5.50 மணியளவில், நகர மையத்தில் உள்ள ஈரான் தூதரக வளாகத்தில் ஒருவர் வேலியை தாண்டியதாக தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து, ஒட்டாவா பொலிஸார் அங்கு சென்றதாக தெரிவித்துள்ளனர்.

கனடா 2012 ஆம் ஆண்டு ஈரானுடன் தூதரக உறவுகளை துண்டித்ததையடுத்து, அந்தக் கட்டடம் வெறுமையாக இருந்து வருகிறது.

சமூக ஊடகங்களில் வெளியான காணொலியில், பாதுகாப்பு வேலிக்குப் பின்னால் நின்ற போராட்டக்காரர் ஒருவர், நுழைவாயிலின் மேலே இருந்த ஈரானின் தேசிய சின்னத்தை அகற்றுவதும், ஒரு ஜன்னலின் அருகே சேதப்படுத்துவதும் பதிவாகியுள்ளது.

அகற்றப்பட்ட அந்தச் சின்னம், ஈரான் இஸ்லாமிய குடியரசின் முத்திரையாகும் அது நாட்டின் கொடியிலும் இடம்பெறுகிறது.

பின்னர், அந்த இடத்தில் 1979 இஸ்லாமிய புரட்சிக்கு முன்பு ஈரானின் தேசிய அடையாளமாக இருந்த "சிங்கம் மற்றும் சூரியன்" குறியீடு இடம்பெற்ற கொடி மற்றும் பலகை வைக்கப்பட்டுள்ளதும் காணொலியில் தெரிகிறது.

சமூக ஊடகங்களில் பரவி வரும் அந்தக் காணொளியைத் தாங்கள் அறிந்துள்ளதாகவும், மேலும் பிற குற்றங்கள் தொடர்பாக விசாரணை நடைபெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஈரானில் தெஹ்ரானில் தொடங்கிய அரசுக்கு எதிரான பெரும் போராட்டங்கள் தற்போது நாடு முழுவதும் பரவி வரும் சூழலிலேயே இந்த தூதரக சேதப்படுத்தல் சம்பவம் நடந்துள்ளது. தூதரக சேதத்தின் முழு விளைவுகள் இன்னும் தெளிவாகவில்லை.

வியன்னா உடன்படிக்கையின்படி, தூதரக உறவுகள் துண்டிக்கப்பட்டிருந்தாலும், தூதரகம் அமைந்துள்ள நாடு தூதரக வளாகங்களை மரியாதை செய்து பாதுகாக்க கடமைப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

# கனடாவின் க்யூபெக் மாகாண முதல்வர் லெகோ பதவி விலகல்



கனடாவின் க்யூபெக் மாகாண முதல்வர் ஃப்ரான்சுவா லெகோ, புதன்கிழமை காலை தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

ஒக்டோபர் மாதத்தில் மாகாணத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில், எனது கட்சிக்கும் க்யூபெக்கிற்கும் நன்மை செய்யும் நோக்கில் இந்த முடிவை எடுத்துள்ளேன் என்று லெகோ தெரிவித்தார்.

வாக்காளர்கள் மாற்றத்திற்கான விருப்பத்தை மட்டுமல்லாது, பொருளாதாரம் மற்றும் பிரெஞ்சு மொழி போன்ற முக்கிய பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு வாக்களிக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

பல க்யூபெக் மக்கள் புதிய முதல்வரை விரும்புகிறார்கள் என்பதை நான் அறிகிறேன் என்றும் லெகோ தெரிவித்தார்.

கட்சி புதிய தலைவரைத் தேர்வு செய்யும் வரை, அவர் இடைக்காலமாக முதல்வர் பதவியில் தொடருவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சமீபத்திய கருத்துக் கணிப்புகளில் லெகோ தலைமையிலான சீ.ஏ.க்யூ கட்சி கடும் வீழ்ச்சியை சந்தித்துள்ளது.

எதிர்வரும் தேர்தலில் அந்தக் கட்சி அனைத்து இடங்களையும் இழக்கக்கூடும் என்ற கணிப்புகளும் வெளியாகியுள்ளன.

கடந்த சில மாதங்களாக, மாகாணத்தில் மருத்துவர்களின் சம்பள முறையை மாற்றும் சட்டம் தொடர்பாகவும், கார் காப்பீட்டு வாரியத்தின் 500 மில்லியன் டாலர் மதிப்புள்ள டிஜிட்டல் மாற்றத் திட்டம் தொடர்பான சர்ச்சையாலும் சீ.ஏ.க்யூ கட்சி கடும் எதிர்ப்பை எதிர்கொண்டு வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

**அமெரிக்கா...**

**(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

மிச்சிகன் மாநிலம் டெட்ராய்ட்டுக்கு செவ்வாய்க்கிழமை மேற்கொண்ட பயணத்தின் போது, இதனால் எங்களுக்கு எந்த உண்மையான நன்மையும் இல்லை. இது தேவையற்றது என உடன்படிக்கை குறித்து ட்ரம்ப் கூறினார்.

கனடாவுக்கு இது மிகவும் பிடிக்கும். கனடா இதை விரும்புகிறது. அவர்களுக்கு இது அவசியம் என்றும் அவர் தெரிவித்தார்.

டெட்ராய்ட்டை தலைமையிடமாகக் கொண்ட பெரிய வாகன உற்பத்தி நிறுவனங்களான ஃபோர்டு, ஜெனரல் மோட்டார்ஸ், ஸ்டெல்லான்டிஸ் ஆகியவை, மெக்சிகோ மற்றும் கனடாவில் உற்பத்தி செய்யப்படும் உதிரிப்பாகங்களை பெரிதும் நம்பியுள்ள வழங்கல் சங்கிலிகளை கொண்டுள்ளன.

இந்த மூன்று நிறுவனங்களும் ஆண்டுதோறும் கனடா மற்றும் மெக்சிகோவில் லட்சக்கணக்கான வாகனங்களை உற்பத்தி செய்து வருகின்றன.

டெஸ்லா, டொயோட்டா, ஃபோர்டு உள்ளிட்ட முக்கிய கார் உற்பத்தியாளர்கள் கடந்த நவம்பரில், USMCA அமெரிக்க வாகனத் தொழிலுக்கு மிக முக்கியம் எனக் கூறி, அந்த ஒப்பந்தத்தை நீட்டிக்க ட்ரம்ப் நிர்வாகத்தை வலியுறுத்தியிருந்தனர்.